# II. 1962ம் ஆண்டு பொருளாதார, நிதி நிலைமைகளின் போக்கு

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்

### முன்னுரை

1962ம் ஆண்டிற்கான மொத்தத் தேசிய உற்பத்தி, நடைமுறைச் சந்தைக் கொள் விலைகளின்படி 63,130 இலட்சம் ரூபாய்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய மூன்று ஆண்டுகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளாவன—1959ல், 58,350 இலட்சம் ரூபாய்களும், 1960ல், 60,200 இலட்சம் ரூபாய்களும், 1961ல், 60,670 இலட்சம் ரூபாய்களும் ஆகும். எனவே 1960ம் ஆண்டுக்கான 3.2 சதவீத அதிகரிப்புடனும், 1961ம் ஆண்டுக்கான 0.8 சதவீத அதிகரிப்புடனும் ஒப்பிட்டுப்பார்க்கையில் 1962ம் ஆண்டில் ஏற்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு, 4.1 சதவீத மாகும்.

1962ம் ஆண்டில், பொருளாதாரத்தின் போக்கு ஓரளவு திருப்திகரமாகத் தோன்றினும், சில விபரங்கள் குறிப்பிடத்தக்கவை. 1962ம் ஆண்டு மொத்தத் தேசிய உற்பத்தி உயர்ந்த விகிதத்தால் அதிகரித்துள்ளமையை, 1961ம் ஆண்டின் அதிருப்திகரமான விகிதத்துடன் ஒப்பிடுவதன் மூலம் காணலாம். 1962ம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியை, 1960ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இவ்விரண்டு வருடங்களுக்கான சராசரி உயர்ச்சி விகிதம் 2.4 சதவீதமாகின்றது.

1961ம் ஆண்டுக்கான அதிருப்திகரமான வளர்ச்சிக்குப் பெருமளவில் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட—கணிசமான வீழ்ச்சியே காரணமாகும். இவை ஏற்றுமதிப் பொருட்களின் உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட பொதுப்படையான அதிகரிப்பின் பயன்களை நிராகரித்தன. முந்தைய ஆண்டுகளிலும் பார்க்க 1962ம் ஆண்டில் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக் குறைந்ததெனினும் இது சிறிது தாழ்ந்த ஏற்றுமதி விலைகளின் மட்டத்தை ஈடு செய்வதற்கு மேலதிகமாயிருந்தது. எனவே 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டில், பணநியதியின்படி மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த விகிதாச்சாரமான அதிகரிப்பிற்கு ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட குறைவான வீழ்ச்சியும் ஒரு காரணமாகும்.

எனினும், உண்மை நியதியின்படி 1961ம் ஆண்டிலும் பார்க்க 1962ம் ஆண்டு ஒரு வகையிற் சிறந்ததாகும். 1962ம் ஆண்டிற் பொருளாதாரத்தின் உள்நாட்டுத்துறையில் ஏற்பட்ட உண்மை உற்பத்தி குறிப்பிடத் தக்க விகிதத்தில் அதிகரித்தது. 1961ம் ஆண்டில் ஏற்பட்ட மிகச்சிறிய அதிகரிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1962ம் ஆண்டில், நெல் உற்பத்தி 49 இலட்சம் புசல்களால் அல்லது 11 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்தது.

1961ல், ஏற்கனவே குறிப்பிடும்படியாக அதிகரித்த மீன் உற்பத்தி, 1962ற் கணிசமான அளவால் அதிகரித்தது. எஞ்சிய உள்நாட்டுத் துறையின் உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட பொதுப்படையான வளர்ச்சி வீதம் முந்தைய ஆண்டிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்க விகிதத்தில் உயர்ந்ததாகும்.

பண நியதியின்படி ஏற்றுமதிக்கான நிகர உற்பத்தி, 1961ல் ஏற்பட்ட 3.8 சதவீத வீழ்ச்சிக் கெதிராக 1962ல் 1.2 சதவீதத்தால் அதிகரித்தது. பணநியதியின்படி உள்நாட்டுத் துறையின் நிகர உற்பத்தி முந்தைய ஆண்டில் ஏற்பட்ட 2.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1962ல் 5.0 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னர் குறிப்பிட்ட நெல்லும், மீன் உற்பத்தியும் தவிர்த்து, 1962ல், உள்நாட்டுத் துறையின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வீத அதிகரிப்பிற்கு, கைத்தொழில் உற்பத்தி, போக்கு-வரத்து, செய்தி அறிவிப்பு ஆகியவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பணப்பெறுமான அதிகரிப்புகளும், அரசாங்க முயற்சிகளினுல் ஏற்பட்ட மூலதன அபிவிருத்தியுமே, காரணங்களாகும்.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட குடிசனத்தொகை வளர்ச்சி வீதத்தைக் கவனிக்கும் பொழுது, பணநியதியின்படி தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புகள் சாதகமற்றதாகவே தோன்றுகின்றன. 1962ம் ஆண்டில் சராசரி ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 1.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1960ல் இவ்வதிகரிப்பு 0.3 சதவீதமாயிருந்த போதிலும், 1961ல் இது 1.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1962ம் ஆண்டில் சராசரி ஆளுக்கான மொத்த தேசிய உற்பத்தி 604 ரூபாயாகும். முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அது 1959ல், 606 ரூபாயும், 1960ல், 608 ரூபாயும், 1961ல், 597 ரூபாயும் ஆகும். எனவே 1962ல், சராசரி ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி, 1961லும் பார்க்க உயர்ந்ததாக இருந்த பொழுதிலும், 1959ம், 1960ம் ஆண்டுகளில் எய்திய மட்டங்களை அடையவில்லை.

சந்தை விலைகளின்படி 1962ம் ஆண்டுக்கான மொத்தத் தேசிய செலவு—அதாவது நுகர்ச்சிக்கான செலவும், மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கமும்* ஒருங்கே 67,990 இலட்சம் ரூபாய்களென மதிப்பிடப்பட்டுள்ளது. (இது மொத்தத் தேசிய உற்பத்தி கணிக்கும் விதத்திலும் பார்க்க வேறுபட்ட கணிப்பின்படியாகும்). 1959ம், 1960ம், 1961ம் ஆண்டுகளில் இது முறையே, 65,510 இலட்சம் ரூபாய்களாகவும், 67,360 இலட்சம் ரூபாய்களாகவும், 66,090 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கியது. 1962ல் சராசரி ஆளுக்கான மேற் கூறிய மொத்த தேசிய செலவு 651 ரூபாயாகும். இது 1961ம் ஆண்டுக்கான 650 ரூபாயுடன் சமமாகின்றது. ஆயினும் முந்தைய இரு ஆண்டுகளாகிய 1959, 1960 ஆகிய ஒவ்வொன்றிலும் சராசரி ஆளுக்கான மொத்தத் தேசிய செலவு உயர்ந்த மட்டமாகிய 681 ரூபாய்களில் இருந்தது.

*மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்=மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கமும் கையிருப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பும்.

## அட்டவணை II அ-1

### உற்பத்தியினதும் செலவினதும் சுருக்கக் காட்டிகள்—நடைமுறை விலைகளின்படி

| | 1959 | 1960 | 1961 | 1962 |
|---|---|---|---|---|
| **அ. பெறுமானங்கள்** | | | | |
| 1. சினைக்கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. | 5,835 | 6,020 | 6,067 | 6,313 |
| 2. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவு (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. | 6,551 | 6,736 | 6,609 | 6,799 |
| 3. சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சி (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. | 4,579 | 4,837 | 4,728 | 4,908 |
| 4. சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. .. | 897 | 963 | 968 | 985 |
| 5. சந்தை விலைகளின்படி மொத்த நிலையான உள் நாட்டு மூலதன ஆக்கம் (பத்து இலட்சம் ரூபாய் களில்) .. .. .. .. .. | 1,033 | 967 | 904 | 985 |
| 6. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவை களினதும் ஏற்றுமதிகள் (அ) (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. .. .. | 2,016 | 2,011 | 1,907 | 1,976 |
| 7. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவை களினதும் இறக்குமதிகள் (ஆ) (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. .. .. | —2,176 | —2,209 | —1,972 | —2,068 |
| 8. சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி (இ) (பத்து இலட்சம் ரூபாய்களில்) .. .. .. .. | 606 | 608 | 597 | 604 |
| 9. சராசரி ஆளுக்குரிய மொத்த உள்நாட்டுச் செலவு (ரூபாய்களில்) .. .. .. .. | 681 | 681 | 650 | 651 |
| **ஆ. குறிகாட்டிப் புள்ளிகள் (1939=100.0)** | | | | |
| 1. சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற் பத்தி .. .. .. .. | 100·0 | 103·2 | 104·0 | 108·2 |
| 2. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவு .. .. .. .. | 100·0 | 102·8 | 100·9 | 103·8 |
| 3. சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சி .. | 100·0 | 105·6 | 103·3 | 107·2 |
| 4. சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி .. | 100·0 | 107·4 | 107·9 | 109·9 |
| 5. சந்தை விலைகளின்படி மொத்த நிலையான உள் நாட்டு மூலதன ஆக்கம் .. .. .. | 100·0 | 93·7 | 87·5 | 95·4 |
| 6. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவை களினதும் ஏற்றுமதிகள் (அ) .. .. | 100·0 | 99·7 | 94·6 | 98·0 |
| 7. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவை களினதும் இறக்குமதிகள் (ஆ) .. .. | 100·0 | 101·5 | 90·6 | 95·0 |
| 8. சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி (இ) .. .. | 100·0 | 100·3 | 98·4 | 99·7 |
| 9. சராசரி ஆளுக்குரிய மொத்தத் தேசிய செலவு .. | 100·0 | 100·0 | 95·5 | 95·6 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப்பொருட்களின் பெறுமானம் ஏற்றுமதி விலைகளின்படி.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட வணிகப்பொருட்களின் பெறுமானம் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படையில்.

(இ) கீழ்க்காணும் குடிசனத்தொகை மதிப்பீடுகள் பாவிக்கப்பட்டுள்ளன:-

| | 1959 | 1960 | 1961 | 1962 |
|---|---|---|---|---|
| ஆண்டு நடுப்பகுதியில் குடிசனத்தொகை .. | 9,625,000 | 9,896,000 | 10,167,000 | 10,446,000 |
| குறிகாட்டிப்புள்ளி .. | 100·0 | 102·8 | 105·6 | 108·5 |

## அட்டவணை II அ-2

### நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்: ஏற்றுமதி விலைப் பெறுமானம் .. .. .. | 1,692 | 1,775 | 1,681 | 1,766 | + 4·9 | — 5·3 | + 5·1 |
| கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தின் பெறுமானம் .. .. .. | ... | — 37 | + 16 | — 38 | | | |
| இறக்குமதி செய்து உபயோகித்த பொருட்களைத் தவிர்த்து (சந்தை விலைகளில்) .. .. .. | —121 | —117 | —129 | —133 | | | |
| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பகிர்வுச் செலவு தவிர்த்து .. .. | —104 | —109 | —114 | —123 | | | |
| நிகர உற்பத்தி .. .. .. | 1,467 | 1,512 | 1,455 | 1,472 | + 3·0 | — 3·8 | + 1·2 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள் கூட்டப்பட்ட பெறுமானம் .. .. | 3 | 2 | 2 | 2 | —20·0 | — | — |
| **ஏற்றுமதிக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி)** .. .. .. .. | **1,470** | **1,514** | **1,457** | **1,474** | **+ 3·0** | **— 3·8** | **+ 1·2** |
| **II. உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி)** | | | | | | | |
| (i) விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும் .. .. | 1,279 | 1,342 | 1,380 | 1,430 | + 5·0 | + 2·9 | + 3·6 |
| (ii) கைத்தொழில் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. .. | 255 | 305 | 342 | 406 | + 19·3 | + 12·1 | + 18·9 |
| (iii) மூலதன அபிவிருத்தி (பொருட்களும் சேவைகளும்) | | | | | | | |
| (அ) அரசாங்கம் .. .. .. | 220 | 177 | 181 | 186 | —19·6 | + 2·3 | + 2·6 |
| (ஆ) பொது முயற்சிகள் .. .. | 45 | 42 | 48 | 86 | — 6·0 | + 13·6 | + 80·5 |
| (இ) தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. | 249 | 252 | 239 | 209 | + 1·2 | — 5·2 | —12·8 |
| (iv) போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும் (அரசாங்கம் அல்லாதவை) .. .. | 429 | 454 | 450 | 485 | + 5·8 | — 1·0 | + 7·8 |
| (v) வர்த்தகம் (அரசாங்கம் அல்லாதவை) .. | 617 | 631 | 601 | 627 | + 2·2 | — 4·7 | + 4·3 |
| (vi) குடியிருப்புக்களின் உடமை .. .. | 169 | 178 | 196 | 205 | + 5·9 | + 9·9 | + 4·5 |
| (vii) அரசாங்கம் (முன்பு சேர்க்கப்படாதவை) .. | 701 | 724 | 757 | 776 | + 3·3 | + 4·5 | + 2·5 |
| (viii) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. .. .. | 438 | 445 | 457 | 474 | + 1·5 | + 2·8 | + 3·5 |
| **மொத்தம்** .. .. .. | **4,402** | **4,550** | **4,651** | **4,883** | **+ 3·4** | **+ 2·2** | **+ 5·0** |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி** .. .. | **5,872** | **6,064** | **6,107** | **6,356** | **+ 3·3** | **+ 0·7** | **+ 4·1** |
| **IV. வெளிநாட்டிலிருந்து வந்த நிகர வருமானம்** .. .. .. | **— 37** | **— 44** | **— 40** | **— 43** | | | |
| **V. மொத்தத் தேசிய உற்பத்தி** .. .. | **5,835** | **6,020** | **6,067** | **6,313** | **+ 3·2** | **+ 0·8** | **+ 4·1** |

## விடயங்களின் விளக்கம்.

1. அரசாங்க விடயங்கள் II (3) (அ)வும், II (7) உம், மத்திய அரசாங்கத்தையும் உள்ளூர் ஆட்சியையும் அடக்கியுள்ளனவெனினும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் அரசாங்க முயற்சிகளையும் (அதாவது புகைவண்டி, மின்சாரத் திணைக்களங்கள், துறைமுக ஆணைக்காரியாலயம், தபால் தந்தி, உப்புத் திணைக்களங்கள் ஆகியன) விலக்கியே, விளக்கப்பட்டுள்ளன.

2. விடயம் II (7), (அரசாங்கம் முன்பு சேர்க்கப்படாதவைகள்), அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகளையும் சேர்த்துள்ளது.

3. அரசாங்கத்துறையில் மூலதன அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட நிகர உற்பத்தி [விடயம் II (3) (அ)] பின்வருவனவற்றையும் அடக்கியுள்ளது:—
   (அ) ஒப்பந்தத்திற் செய்யப்பட்ட அரசாங்க மூலதன வேலைகளின் நிகர உற்பத்தி.
   (ஆ) மூலதன அபிவிருத்தியில் ஈடுபடும்போது ஏற்படுகின்ற சார்புச் சேவைகள், உதாரணமாக, அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களை ஏற்றி இறக்குதல் போன்றவை.

4. தனிப்பட்டோர் துறையில் மூலதன அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட நிகர விளைவு [விடயம் II (3) (இ)] பின்வருவனவற்றை அடக்கியுள்ளது:—
   (அ) கட்டட ஆக்கத் தொழில்களின் நிகர உற்பத்தி.
   (ஆ) கட்டட ஆக்கப் பொருட்களையும் உள்நாட்டு உபயோகத்திற்கான ஏனைய மூலதனப் பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற கைத்தொழில்களின் நிகர உற்பத்தி.
   (இ) பயிர் நடுகையினதும் மாற்று நடுகையினதும் நிகர உற்பத்தி.

5. விடயம் II (4) (போக்குவரத்து செய்தி அறிவிப்பு (அரசாங்கம் அல்லாதவை) விடயம் II (5) [வர்த்தகம் (அரசாங்கம் அல்லாதவை)] ஆகியவற்றுள் இத்துறைகளில் இயங்கும் பொதுமுயற்சிகளின் நிகர உற்பத்தியும் சேர்க்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளைப் போல் அல்லாது, ஏற்றுமதித் துறையில் செய்யப்பட்ட சேவைகளும் இவ் விடயங்களில் அடங்கும்.

## பொதுக் குறிப்புகள்.

1. பிரசுரிக்கப்பட்ட மூலங்கள் (இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள் போன்றவை), சில குறித்த விடயங்களில் விசேட மூலங்கள் (உதாரணமாக, கைத்தொழில் உற்பத்தி பற்றிக் கைத்தொழிற் திணைக்களம்), ஆகியனவற்றைத் தவிர இந்த அட்டவணையையும், மொத்த தேசிய செலவு பற்றிய அட்டவணையையும் தயாரிக்கத் தேவையான சகல மூலாதார விபரங்களும் குடிசனத்தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினாற் கொடுக்கப்பட்டவை.

2. அட்டவணைகளிலுள்ள எண்கள் மட்டமாக்கப்பட்டதின் காரணமாக விடயங்களின் எண்தொகைகள் கூட்டப்படும் பொழுது, அவை மொத்தங்களுடன் சரியாக ஒத்துவரமாட்டா.

3. அட்டவணைகளிலுள்ள சதவீத மாற்றங்கள், பெறுமானங்களைப் பத்து இலட்சம் ரூபாய்களிலிருந்து ஒரு தசம தானத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அடிப்படையிற் கணிக்கப்பட்டுள்ளன.

4. மு.சே.ப = முன்பு சேர்க்கப்படாதவை.

5. 1961ம் ஆண்டு மகா வங்கி அறிக்கையிற் பிரசுரிக்கப்பட்ட, 1959ல் இருந்து 1961ம் ஆண்டுக்கான உற்பத்தியினதும் செலவினதும் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. 1962ம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

நடைமுறைச் சந்தை விலைகளின்படி 1962ம் ஆண்டுக்கான தனிப்பட்டோர் நுகர்ச்சி 49,080 இலட்சம் ரூபாய்களாகும். இது 1961ம் ஆண்டுக்கான தொகையிலும் பார்க்க 3.8 சதவீதம் உயர்ந்ததாகும். நடைமுறைச் சந்தை விலைகளின்படி, 9,850 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய அரசாங்க நுகர்ச்சி, 1.8 சதவீதத்தால் மட்டுமே உயர்ந்தது. 1962ம் ஆண்டில், 9,850 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மொத்த நிலையான உள்நாட்டுமூலதன ஆக்கம் 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தால் மேலதிகமாக அதிகரித்தது. ஆயினும் 1962ம் ஆண்டுக்கான இத்தொகை, 1959ம் ஆண்டுக்கான 10,330 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்க மிகவும் தாழ்ந்ததாகவே இருக்கின்றது.

சர்வதேச வர்த்தக நிலைமை சம்பந்தமான ஒரு சுருக்கம், அட்டவணை II அ-1ன் விடயங்கள் அ, 6லும், அ, 7லும் தரப்பட்டுள்ளது. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள், 1961ம் ஆண்டின் மட்டமாகிய 19,070 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1962ம் ஆண்டு 19,760 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்திருப்பதைக் காணலாம். 1962ம் ஆண்டு மட்டம் 1961ம் ஆண்டிலும் பார்க்க உயர்ந்ததாகிலும், 1959ம் ஆண்டில் அடைந்த உயர்ந்த மட்டத்திலும் பார்க்க 2 சதவீதம் குறைந்ததாகும். 1962ம் ஆண்டிற்கான பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிப் பெறுமானமாகிய (செலாவணிக் கட்டுப்பாட்டு விபரங்களின்படி கணிக்கப்பட்டவை) 20,680 இலட்சம் ரூபாய்கள், முந்தைய ஆண்டு மட்டத்திலும் பார்க்க 4.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. 1960ம் ஆண்டின் உச்சமட்டத்துடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டின் இறக்குமதிகள் 6.0 சதவீதத்தாற் தாழ்ந்தவையாகும்.

## பணநியதியின்படி உற்பத்தியும் செலவும்

அட்டவணை II அ-2ல், நடைமுறைச் சினைக்கொள்விலைகளின்படி கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் தொகுதிகள் சிறிது விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.

ஏற்றுமதி விலைகளில் ஓர் பொதுப்படையான சிறு வீழ்ச்சி ஏற்பட்ட பொழுதிலும், 1962ம் ஆண்டுக்கான உள்நாட்டு ஏற்றுமதிகளின் பெறுமானம், 1961ம் ஆண்டிலும் பார்க்க 5.1 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் ஏற்றுமதிகளின் பெறுமானத்தில் உண்டான அதிகரிப்பு தேயிலையின் கையிருப்புகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் பயனுகவே ஏற்பட்டது. ஏற்றுமதிப் பயிர்களின் உண்மை உற்பத்தி சம்பந்தமாக, 1962ம் ஆண்டு தேயிலையிலும், தேங்காய்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு வீதங்கள் 1961ம் ஆண்டில் எய்தியவைகளிற் பார்க்கக் குறைந்தவைகளே.

கீழே உள்ள அட்டவணை II அ-5ல், நடைமுறை உற்பத்தியாளரின் விலைகளில் உள்நாட்டு நுகர்ச்சிக்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானங்கள், விரிவாகத் தரப்பட்டுள்ளன. விவசாயம், வனவியல், கால்நடை, மீன்பிடித்தல் ஆகிய துறைகளில் உள்நாட்டு உற்பத்தியினுற் கிடைத்த பெறுமானத்தை, 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டில், இது 3.6 சதவீதத்தால் உயர்ந்தது. முந்தைய ஆண்டிலும் பார்க்க இது சாதகமான அதிகரிப்பு வீதமாயினும், 1960ம் ஆண்டைப் போற் சிறந்ததல்ல. கைத்தொழில் நுகர்ச்சிப் பொருட்கள் என்னும் துறையில் உள்நாட்டு உற்பத்தியினுற் கிடைத்த பெறுமானம் 1961ம் ஆண்டிலும் பார்க்க, 1962ம் ஆண்டில் 19 சதவீதத்தால் உயர்ந்ததாகும். 1960ம் ஆண்டிலும் கிட்டத்தட்ட இவ்வதிகரிப்பு வீதமே ஏற்பட்டதெனினும் 1961ல் ஏற்பட்ட அதிகரிப்பு வீதத்திலும் பார்க்க இது உயர்ந்ததாகும். அரசாங்க முயற்சிகளில் ஏற்பட்ட பெருமளவான மூலதன ஆக்கஅதிகரிப்பின் பயனுக முந்தைய இரு ஆண்டுகளிலும் பார்க்க 1962ம், ஆண்டில் மூலதன ஆக்கம் சிறிது உயர்ந்துள்ளதென்பதை, அட்டவணை II அ-2ல் இருந்து காணலாம். 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டில் தனிப்பட்டோர் துறையினதும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் மொத்த மூலதன ஆக்கம் தாழ்ந்ததாகவே இருந்த பொழுதிலும் அரசாங்க மூலதன ஆக்கம் சிறிது உயர்ந்துள்ளது. சேவை என்னும் துறைகளில் ''போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும்'', ''குடியிருப்புக்களின் உடைமையும்'', ''வர்த்தகமும்'' 1962ம் ஆண்டுக்கான மொத்த தேசிய உற்பத்தியின் சராசரி வீத அதிகரிப்பிலும் பார்க்கக் கூடிய வீதம் கொண்ட அதிகரிப்புகளைப் பதிவு செய்தன.

## அட்டவணை II அ-3

### நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்தத் தேசிய செலவு

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **I. தனிப்பட்டோர் நுகர்ச்சி** | | | | | | | |
| (அ) பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | | | | | | | |
| (i) உணவினதும், ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்களினதும் (அ) இறக்குமதிகள் .. .. | 1,793 | 1,932 | 1,724 | 1,781 | + 7·8 | —10·8 | + 3·3 |
| (ii) சினைக்கொள் அல்லாத சேவைகளின் இறக்குமதிகள் .. .. | 178 | 152 | 137 | 131 | —14·5 | —10·0 | — 4·5 |
| மொத்தம் .. .. .. | 1,971 | 2,084 | 1,860 | 1,912 | + 5·7 | —10·8 | + 2·8 |
| (ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பொருட்களும் (அ) சேவைகளும் | | | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் .. .. | 2,015 | 2,106 | 2,190 | 2,309 | + 4·5 | + 4·0 | + 5·4 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை .. | 186 | 197 | 216 | 226 | + 5·9 | + 9·7 | + 4·3 |
| (iii) போக்குவரத்தும் செய்தியறிவிப்பும் .. .. .. | 241 | 256 | 272 | 286 | + 6·2 | + 6·4 | + 4·9 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | 467 | 475 | 488 | 506 | + 1·6 | + 2·8 | + 3·6 |
| அரசாங்கக் கொள்வனவுகள் தவிர்த்து .. .. .. | —107 | —112 | —139 | —151 | | | |
| மொத்தம் .. .. .. | 2,803 | 2,921 | 3,028 | 3,175 | + 4·2 | + 3·6 | + 4·9 |
| (இ) இலங்கையில் வாசஞ் செய்யாதோர் கொள்வனவு செய்த பொருட்களையும் சேவைகளையும் தவிர்த்து .. .. | —195 | —169 | —160 | —178 | | | |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி** | **4,579** | **4,837** | **4,728** | **4,908** | + 5·6 | — 2·3 | + 3·8 |
| **II. அரசாங்க நுகர்ச்சி** | | | | | | | |
| (i) பொருட்களினதும் சேவைகளினதும் நடைமுறைச் செலவு-மத்திய அரசாங்கம் .. .. .. | 787 | 855 | 873 | 886 | + 8·7 | + 2·0 | + 1·5 |
| (ii) பொருட்களிலும் சேவைகளிலும் நடைமுறைச் செலவு-உள்ளூராட்சி .. .. .. | 90 | 87 | 74 | 78 | — 3·4 | —15·0 | + 5·8 |
| (iii) அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகள் .. .. | 20 | 21 | 21 | 22 | + 5·0 | — | + 2·4 |
| **மொத்தம்** .. .. .. | **897** | **963** | **968** | **985** | + 7·4 | + 0·4 | + 1·8 |
| **III. மொத்த நிலையான உள்நாட்டு ஆக்கம்** | | | | | | | |
| (i) அரசாங்கம் .. .. .. | 288 | 268 | 238 | 242 | — 6·7 | —11·2 | + 1·6 |
| (ii) பொதுமுயற்சிகள் .. .. | 69 | 60 | 74 | 104 | —13·3 | +23·5 | +40·3 |
| (iii) தனிப்பட்டோர் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. | 676 | 639 | 591 | 639 | — 5·5 | — 7·4 | + 8·0 |
| **மொத்தம்** .. .. .. | **1,033** | **967** | **904** | **985** | — 6·3 | — 6·5 | + 9·0 |
| **IV. கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | | | |
| (i) அரசாங்கம் .. (ii) பொதுமுயற்சிகள் } (ஆ) .. | + 28 | — 4 | — 1 | — 42 | | | |
| (iii) தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் (இ) | + 16 | — 27 | + 11 | — 38 | | | |
| **மொத்தம்** .. .. .. | + 44 | — 31 | + 10 | — 80 | | | |
| **V. மொத்த உள்நாட்டுச் செலவு (ஈ)** .. | **6,551** | **6,736** | **6,609** | **6,799** | + 2·8 | — 1·9 | + 2·9 |
| **VI. வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடு (உ)** | —208 | —221 | — 94 | —124 | | | |
| **VII. சர்வதேச நன்கொடைகளினதும் மாற்றங்களினதும் நிகர வரவுகள் (நீக்கி)** .. | + 12 | —22 | — 11 | — 11 | | | |
| **VIII. மொத்தத் தேசிய செலவு** .. .. | **6,355** | **6,494** | **6,505** | **6,664** | + 2·2 | + 0·2 | + 2·4 |

மூலங்கள்: அட்டவணை II அ-2ல் உள்ள பொதுக்குறிப்புக்களைப் பார்க்கவும்.

(அ) சில்லரை விலைகளில்.

(ஆ) பின்வரும் விடயங்களின் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும்—இறக்குமதி செய்யப்பட்ட அரிசியும், கோதுமை மாவும், சீனியும்; உத்தரவாத விலைத்திட்ட நெல்; சாராயம்.

(இ) தேயிலை, இரப்பர், கால்நடை ஆகியவற்றின் கையிருப்புக்களில் மட்டும் ஏற்பட்ட மாற்றங்கள்.

(ஈ) இது நுகர்ச்சிக்கான செலவு, மொத்த நிலையான மூலதன ஆக்கம், கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், ஆகியவற்றுடன் சமமாகும்.

(உ) வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடு = நடைமுறைக் கணக்கில் தேசத்தின் மிகை.

அட்டவணை II அ-3ல், நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய செலவுக்கான நேர்முக மதிப்பீடுகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. தனிப்பட்டோர் நுகர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் சில்லறைப் பெறுமானம் 1962ம் ஆண்டில் 2.8 சதவீதத்தால் அதிகரித்தமை, முந்தைய ஆண்டில் ஏற்பட்ட 10.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. தனிப்பட்டோர் நுகர்ச்சிக்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிலும் சேவைகளிலும் 1961ம் ஆண்டில் ஏற்பட்ட 3.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டு, 4.9 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. 1960ம் ஆண்டிலும் பார்க்க, 1961ம் ஆண்டில் மிகச் சிறிதளவு அதிகரித்த பொருட்களினதும் சேவைகளினதும் மொத்த அரசாங்க நுகர்ச்சி, 1962ல், 1.8 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டு மொத்த நிலையான மூலதன ஆக்கம் சம்பந்தமாக, 1962ம் ஆண்டில் அரசாங்க முயற்சிகளுக்கான அதிகரிப்பு 40.3 சதவீதமாக இருந்த பொழுதிலும் தனிப்பட்டோர் துறைக்கும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்குமான மொத்த அதிகரிப்பு 8.0 சதவீதமாகும்.

## அட்டவணை II அ-4

### நடைமுறை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின் பேரில் ஏற்பட்ட செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | 1962 | | 1959 | 1960 | 1961 | 1962 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி .. | 5,835 | 6,020 | 6,067 | 6,313 | 4. நுகர்ச்சிச் செலவு: தனிப்பட்டோர் .. .. | 4,579 | 4,837 | 4,728 | 4,908 |
| 2. மானியங்கள் தவிர்த்த மறைமுக வரிகள் (அ) .. | 389 | 413 | 389 | 422 | 5. நுகர்ச்சிச் செலவு: அரசாங்கம் .. .. | 897 | 963 | 968 | 985 |
| | | | | | 6. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. .. .. | 691 | 611 | 602 | 601 |
| | | | | | 7. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கமும் பொது முயற்சிகளும்.. | 385 | 325 | 312 | 304 |
| | | | | | 8. மொத்த உள்நாட்டுச் செலவு (ஆ) .. .. | 6,551 | 6,736 | 6,609 | 6,799 |
| | | | | | 9. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் .. | 2,016 | 2,011 | 1,907 | 1,976 |
| | | | | | 10. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் (நீக்கி) .. .. | -2,176 | -2,209 | -1,972 | -2,068 |
| | | | | | 11. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான செலவு .. | 6,392 | 6,538 | 6,545 | 6,707 |
| | | | | | 12. வெளிநாட்டிலிருந்து வரும் நிகர சினை வருமானம் .. .. | — 37 | — 44 | — 40 | — 43 |
| | | | | | 13. எஞ்சியவை: கையிருப்புக்களில் மறைமுக மாற்றங்களும் புள்ளி விபரத் தவறுகளும் .. .. | —131 | — 61 | — 48 | + 72 |
| **3. சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி** .. | 6,224 | 6,433 | 6,457 | 6,736 | **14. சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்திக்கான செலவு (இ)** .. .. .. | 6,224 | 6,433 | 6,457 | 6,736 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) உள்ளூர் ஆட்சிவரிகளையும் சேர்த்துள்ளது.

(ஆ) நுகர்ச்சிக்கான செலவுடனும் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்துடனும் சமமாகின்றது.

(இ) இவ்வட்டவணையிலுள்ள 11ம், 12ம் விடயங்களினதும் அட்சர கணிதத்தொகை, மொத்தத் தேசிய உற்பத்திக்கு (அட்டவணை II அ–3ன் விடயம் 8ற்குச்) சமமாகும். இது இவ்வட்டவணையின் 14ம் விடயத்தில் (சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்திக்கான செலவில்) இருந்து விடயம் 13ல் (கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும் புள்ளிவிபரத் தவறுகளும்) காட்டப்பட்டுள்ள தொகையால் மட்டுமே வேறுபடுகின்றது.

தனிப்பட்டோரினதும் அரசாங்கத்தினதும் நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம், கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், ஆகியனவற்றின் கூட்டுத் தொகையே மொத்தத் தேசிய செலவு என, அட்டவணை II அ-3ன் விடயம் 5ற் காண்பிக்கப்பட்டுள்ளது. நிகர வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து சர்வதேச நன்கொடைகளினதும் மாற்றங்களினதும் நிகர வருமானங்களைக் கழித்தபின் வரும் தொகையளவால் மொத்த உள்நாட்டுச் செலவு, மொத்தத் தேசிய செலவிலிருந்து (அட்டவணையின் விடயம் 8) வேறுபடுகின்றது. 1959ல் இருந்து 1962 வரையுள்ள ஒவ்வொரு வருடத்திலும் வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடுகளிற் கரைவு ஏற்பட்டதன் பயனுக மொத்தத் தேசிய செலவு, மொத்த உள்நாட்டுச் செலவிலும் பார்க்கத் தாழ்ந்ததாக இருந்தது.

கருத்துரீதியின்படி, மான்யங்கள் தவிர்ந்த மறைமுகவரிகளுக்குத் திருத்தியமைக்கப்பட்டபின் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்தத் தேசிய செலவு, நடைமுறைச் சினைக்கொள் விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்திக்குச் சமமாகும். அட்டவணை II அ-4, தனித்தனியே கிடைக்கப்பெற்ற மொத்தத் தேசிய உற்பத்தியினதும், மொத்தத் தேசிய செலவினதும் மதிப்பீடுகளை ஒப்பியல்பாக்குகின்றதெனினும், இவ்வட்டவணையின் விடயம் 13ற் காட்டப்பட்ட தொகைகள், உற்பத்திக்கும், செலவிற்குமான கூட்டுத் தொகைகளுக்கு இடையிலுள்ள பொதுப்படையான பொருத்தமின்மைகளைக் காட்டுகின்றன. 1962ம் ஆண்டிற்கான பொருத்தமின்மைகள் 720 இலட்சம் ரூபாய்களாகும். முந்தைய இரு ஆண்டுகளிலும் பார்க்க இது உயர்ந்ததெனினும் 1959ம் ஆண்டிற் பார்க்கக் குறைந்ததேயாகும். உற்பத்தியினதும் செலவினதும் அட்டவணைகள் தயாரிப்பதில் சுங்கப் புள்ளி விபரங்களும் சென்மதி நிலுவைப்புள்ளி விபரங்களும் பாவிக்கப்பட்டிருப்பதினுல், 1962ம் ஆண்டில் ஏற்பட்ட பொருத்தமின்மையின் பெருமளவு அதிகரிப்பிற்கு, இவ்வாண்டின் இறக்குமதி வணிகம் சம்பந்தமான சுங்கப்புள்ளி விபரங்களுக்கும், சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களுக்கும் இடையிலுள்ள பரந்த வேறுபாடுகள், ஒரு காரணமாகும்.

### அட்டவணை II அ-5

**உற்பத்தியாளர்களின் நடைமுறை விலைகளின்படி உள்நாட்டு நுகர்ச்சிக்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம்.**

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **(i) விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும்** | | | | | | | |
| அரிசி .. .. .. .. | 400 | 472 | 475 | 524 | +18·2 | + 0·6 | +10·4 |
| தேங்காயும் தெங்கு உற்பத்திப் பொருட்களும் .. .. .. .. | 208 | 168 | 147 | 135 | −19·4 | —12·2 | — 8·1 |
| தேயிலை .. .. .. .. | 53 | 55 | 56 | 58 | + 3·8 | + 2·4 | + 3·2 |
| ஏனைய உணவுப் பயிர்கள் .. .. | 327 | 352 | 385 | 380 | + 7·7 | + 9·3 | — 1·1 |
| புகையிலை .. .. .. .. | 14 | 14 | 15 | 17 | — | + 8·6 | +13·8 |
| வெற்றிலையும் பாக்கும் .. .. .. | 34 | 37 | 38 | 34 | + 7·3 | + 1·6 | — 8·3 |
| விறகு .. .. .. .. | 14 | 14 | 15 | 15 | — | + 4·3 | — |
| கால்நடை .. .. .. .. | 145 | 135 | 136 | 136 | — 6·8 | + 0·5 | — |
| மீன் .. .. .. .. | 60 | 69 | 86 | 101 | +13·9 | +25·3 | +17·1 |
| ஏனைய விவசாயப் பொருட்களும், வனப் பொருட்களும் .. .. .. | 49 | 52 | 53 | 55 | + 4·9 | + 2·9 | + 3·6 |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்கள் (நீக்கி) (அ) .. .. | —25 | —25 | —25 | —27 | | | |
| உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானம் .. | 1,279 | 1,342 | 1,380 | 1,430 | + 5·0 | + 2·9 | + 3·6 |
| **(ii) கைத்தொழில் (மூலதன அபிவிருத்தியைத் தவிர்த்து)** | | | | | | | |
| ஆலைக் கைத்தொழில்கள் .. .. | 314 | 379 | 416 | 454 | +20·8 | + 9·8 | + 9·0 |
| குடிசைக் கைத்தொழில்கள் .. .. | 110 | 113 | 116 | 119 | + 2·5 | + 2·9 | + 2·9 |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்கள் (நீக்கி) (அ) .. .. | —168 | —187 | —191 | —167 | | | |
| உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானம் .. | 255 | 305 | 342 | 406 | +19·3 | +12·1 | +19·0 |

*மூலங்கள்: இலங்கை மகா வங்கி, குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், கைத்தொழிற் திணைக்களம், மீன் பிடித் திணைக்களம் ஆகியன.*

*(அ) சந்தை விலைகளில்.*

அட்டவணை II அ-6ல், தனிப்பட்டோரின் நுகர்ச்சிச் செலவை, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மேலுள்ள செலவு விடயங்கள் என்றும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதும் சேவைகளின் மேலுமுள்ள, செலவு விடயங்கள் என்றும், விரிவாகப் பாகுபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை II அ-6
## நடைமுறைச் சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சிச் செலவின் அமைப்பு

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **அ. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள்** | | | | | | | |
| (i) அரிசியும் கோதுமை மாவும், சீனியும் .. .. .. | 490 | 488 | 522 | 545 | — 0·3 | + 7·0 | + 4·4 |
| (ii) ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்கள் .. .. | 1,304 | 1,444 | 1,201 | 1,236 | +10·8 | —16·8 | + 2·9 |
| (iii) சினைக்கொள் அல்லாத சேவைகள் .. .. | 178 | 152 | 137 | 131 | —14·5 | —10·0 | — 4·5 |
| **மொத்தம் .. ..** | **1,971** | **2,084** | **1,860** | **1,912** | **+ 5·7** | **—10.8** | **+ 2·8** |
| **ஆ. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும்** | | | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் .. | | | | | | | |
| அரிசி .. .. .. | 312 | 308 | 275 | 306 | — 1·5 | —10·6 | +11·2 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள் | 232 | 187 | 162 | 154 | —19·4 | —13·4 | — 4·8 |
| தேயிலை .. .. .. | 62 | 66 | 69 | 74 | + 6·8 | + 4·7 | + 7·0 |
| ஏனைய உணவுப் பயிர்கள் .. | 398 | 435 | 476 | 474 | + 9·3 | + 9·4 | — 0·5 |
| புகையிலை .. .. .. | 20 | 20 | 22 | 25 | — | + 8·5 | +13·8 |
| வெற்றிலையும் பாக்கும் .. | 46 | 50 | 50 | 46 | + 7·1 | — | — 8·3 |
| விறகு .. .. .. | 15 | 16 | 17 | 17 | + 3·3 | + 4·4 | — |
| கால்நடை .. .. .. | 174 | 168 | 185 | 181 | — 3·5 | +10·1 | — 2·4 |
| மீன் .. .. .. | 80 | 92 | 115 | 134 | +13·9 | +25·5 | +17·0 |
| ஏனைய விவசாயப் பொருட்களும், வனப் பொருட்களும் .. | 57 | 59 | 61 | 63 | + 4·9 | + 2·9 | + 3·6 |
| கைத்தொழில் உற்பத்திகள் .. | 619 | 706 | 759 | 836 | +14·1 | + 7·5 | +10·2 |
| மொத்தம் .. .. .. | 2,015 | 2,106 | 2,190 | 2,309 | + 4·5 | + 4·0 | + 5·4 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை .. | 186 | 197 | 216 | 226 | + 5·9 | + 9·7 | + 4·3 |
| (iii) போக்குவரத்தும் செய்தியறிவிப்பும் .. .. | 241 | 256 | 272 | 286 | + 6·2 | + 6·4 | + 4·9 |
| (iv) சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. .. | | | | | | | |
| நிதியீட்டச் சேவைகள் (அ) .. | 13 | 14 | 15 | 16 | + 8·5 | + 7·1 | + 8·0 |
| பொழுது போக்குகள் களியாட்டங்கள் .. .. | 24 | 25 | 26 | 27 | + 3·3 | + 3·2 | + 2·7 |
| வீட்டுச்சேவைகள் .. .. | 200 | 203 | 209 | 218 | + 1·5 | + 3·1 | + 4·0 |
| விடுதிகளும் போசனசாலைகளும் .. .. | 119 | 121 | 125 | 130 | + 1·5 | + 3·1 | + 4·0 |
| உயர் தொழிலும் தாபனச் சேவைகளும் (மு.சே.ப.) (ஆ) .. | 61 | 61 | 61 | 61 | — | — | — |
| சொந்தச் சேவைகள் (மு.சே.ப) (இ) .. .. | 50 | 51 | 52 | 54 | + 1·4 | + 3·2 | + 4·0 |
| மொத்தம் .. .. | 467 | 475 | 488 | 506 | + 1·6 | + 2·8 | + 3·6 |
| அரசாங்க உள்நாட்டுக் கொள்வனவுகள் (நீக்கி) .. .. | —107 | —112 | —139 | —151 | | | |
| **மகா மொத்தம் .. ..** | **2,803** | **2,921** | **3,028** | **3,175** | **+ 4·2** | **+ 3·6** | **+ 4·9** |
| **இ. இலங்கையில் வாசஞ் செய்யாதோராற் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் (நீக்கி) .. ..** | **—195** | **—169** | **—160** | **—178** | | | |
| **மொத்த தனிப்பட்டோர் நுகர்ச்சி ..** | **4,579** | **4,837** | **4,728** | **4,908** | **+ 5·6** | **— 2·2** | **+ 3·8** |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) வங்கிகள், காப்புறுதி ஸ்தாபனங்கள், ஏனைய நிதியீட்டும் ஸ்தாபனங்கள் ஆகியவற்றால் முயற்சிகளில் இருந்து வேறுபட்ட தாய்க் குடியிருப்புகளுக்கு அளித்த சேவைகளின் பெறுமானம்.

(ஆ) தனிப்பட்டோரின் மருத்துவ, சட்ட, கல்விச்சேவைகளும்; சமய, பொதுநல தாபனங்கள், தொழிலாளர் சங்கங்கள் போன்ற இலாபத்தை நோக்கமாகக் கொள்ளாத சபைகளினால் அளிக்கப்பட்ட சேவைகளும்.

(இ) கட்டாடி, நாவிதர்கள், சாஸ்திரிகள், பொறுப்பேற்போரின் சேவைகள் ஆகியன.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவற்றின் நுகர்ச்சிப் பெறுமானம் 1960ம் ஆண்டு தொடக்கம் அதிகரித்துக்கொண்டு செல்வதை இவ்வட்டவணையில் இருந்து காணலாம். மறுபக்கத்தில் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சினைக்கொள் அல்லாத சேவைகளின் கொள்வனவுகள் தளராதவொரு வீழ்ச்சிப் போக்கைக் காட்டுகின்றன. 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டில் ஏனைய இறக்குமதிப் பொருட்களின் நுகர்ச்சி சிறிதளவு உயர்ந்ததெனினும், 1960ம் ஆண்டிற் பார்க்க மிகவும் குறைந்ததாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் மீதுள்ள செலவு 11.2 சதவீதத்தாலும், மீன் உற்பத்தியின் மீதுள்ள செலவு, 17.0 சதவீதத்தாலும், கைத்தொழிற் பொருட்களின் மீதுள்ள செலவு, 10.2 சதவீதத்தாலும், அதிகரித்துள்ளன.

அட்டவணை II அ-7ல் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் விரிவாகப் பகுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. தனிப்பட்டோர் துறையினதும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் மொத்த நிலையான உள்நாட்டு மூலதன

### அட்டவணை II அ-7

### நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **அ. தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும்** | | | | | | | |
| (i) மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் | | | | | | | |
| பயிர் நடுகையும் மாற்று நடுகையும் .. .. | 63 | 62 | 61 | 56 | — 1·3 | — 0·6 | — 8·8 |
| கட்டட வேலையும் ஏனைய சில கட்டட ஆக்கங்களும் .. | 336 | 341 | 336 | 346 | + 1·7 | — 1·6 | + 3·2 |
| .. | 99 | 76 | 100 | 124 | —23·3 | +30·9 | +24·2 |
| போக்குவரத்து .. .. | 121 | 103 | 40 | 64 | —15·3 | —60·8 | +59·3 |
| இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் (மு.சே.ப.) .. .. | 57 | 57 | 54 | 49 | — | — 4·4 | —10·5 |
| மொத்தம் .. .. | 676 | 639 | 591 | 639 | — 5·5 | — 7·4 | + 8·0 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | | | | | | | |
| தேயிலை .. .. .. | + 3 | —10 | — 2 | —41 | | | |
| இரப்பர் .. .. | — 3 | —27 | + 19 | + 3 | | | |
| கால்நடை .. .. | +15 | + 9 | — 5 | ... | | | |
| மொத்தம் .. .. | +16 | —27 | + 11 | —38 | | | |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. .. .. | 691 | 611 | 602 | 601 | —11·6 | — 1·5 | — 0·2 |
| **ஆ. அரசாங்கமும் பொது முயற்சிகளும்** | | | | | | | |
| (i) மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 357 | 329 | 313 | 346 | — 8·0 | — 4·9 | +10·8 |
| (ii) கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றம் | | | | | | | |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசியும், கோதுமை மாவும் சீனியும் .. .. | +64 | —13 | —65 | —87 | | | |
| உத்தரவாதவிலைத்திட்டநெல் | —35 | +10 | +65 | +45 | | | |
| சாராயம் .. .. | — 1 | ... | — 2 | ... | | | |
| மொத்தம் .. .. | +28 | — 4 | — 1 | —42 | | | |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 385 | 325 | 312 | 304 | —15·7 | — 3·9 | — 2·4 |
| **இ. சகல துறைகளும்** | | | | | | | |
| (i) மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் .. | 1,033 | 967 | 904 | 985 | — 6·3 | — 6·5 | + 9·0 |
| (ii) கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றம் .. | +44 | —31 | +10 | —80 | | | |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் .. .. | 1,076 | 936 | 914 | 905 | —13·0 | — 2·3 | — 1·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

ஆக்கம் இருப்புச் சொத்து ரீதியாகப் பகுக்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. இப் பாகுபாட்டிற் தெரிவது என்னவென்றல், 1962ம் ஆண்டில் ஏற்பட்ட மூல தன ஆக்கத்தின் அதிகரிப்புப் பெருமளவில் ஆலேயும், இயந்திரங்களும், போக்குவரத்துச் சாதனங்களும் என்ற துறைகளிற் திரண்டிருந்ததென்ப தாகும். அரசாங்கத்தையும் பொது முயற்சிகளேயும் ஒருங்கே நோக்குமிடத்து, 1961ம் ஆண்டில் நிலையான இருப்புச் சொத்துக்களின்படி மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட 4.9 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக, 1962ம் ஆண்டு 10.8 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. 1962ம் ஆண்டு தனிப்பட்டோர் துறையில்* (அத் தாட்சிப் படுத்தக்கூடிய) கையிருப்புகள் 380 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதை இவ்வட்டவணே காண்பிக்கின்றது. அரசாங்கத்துறையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவற்றில் 870 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டது. உத்தரவாத விலேத் திட்டத்தின் கீழ் நெற் கையிருப்புகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட 450 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு, இதை ஓரளவு ஈடுசெய்துள்ளது.

## கிடைத்த சாதனங்களும் அவற்றின் பாவிப்பும்

உள்நாட்டு உற்பத்தியின் விளேவாகவும், வெளிநாட்டு வியாபாரத்தின் விளேவாகவும் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய சாதனங்களேயும் அவைகள் உபயோகிக்கப்படும் விதத்தையும், அதாவது, நுகர்ச்சிக்காகவா, மூலதன ஆக்கத்திற்காகவா, அல்லது ஏற்றுமதிக்காகவா என்று, அட்ட வணே II அ-8 விளக்குகின்றது. பொருள்வளங்களின் விளேவாக 1962ம் ஆண்டு மொத்தத் தேசிய உற்பத்தி 2.5 சதவீதத்தால் அதிகரித்ததெனினும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும் சினேக்கொள் அல்லாத சேவை களும் 4.9 சதவீதத்தால் அதிகரித்தன.

### அட்டவணே II அ-8

### நடைமுறைச் சந்தை விலேகளின்படி பொருள்வளங்களும் அவற்றின் பாவிப்பும்

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1951ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **அ. பொருள் வளங்கள்** | | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ) .. | 6,392 | 6,538 | 6,545 | 6,707 | + 2·3 | + 0·1 | + 2·5 |
| பொருட்களினதும் சினேக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்கு மதிகள் .. .. .. | 2,176 | 2,209 | 1,972 | 2,068 | + 1·5 | —10·7 | + 4·9 |
| **மொத்தம் .. ..** | **8,567** | **8,746** | **8,517** | **8,775** | **+ 2·1** | **— 2·6** | **+ 3·0** |
| **ஆ. பாவிப்பு** | | | | | | | |
| நுகர்ச்சி .. .. .. | 5,475 | 5,800 | 5,69 | 5,894 | + 5·9 | — 1·8 | + 3·5 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 1,076 | 936 | 914 | 905 | —13·0 | — 2·3 | — 1·0 |
| பொருட்களினதும் சினேக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் .. .. | 2,016 | 2,011 | 1,907 | 1,976 | — 0·3 | — 5·1 | + 3·6 |
| **மொத்தம் .. ..** | **8,567** | **8,746** | **8,517** | **8,775** | **+ 2·1** | **— 2·6** | **+ 3·0** |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*(அ) இது மான்யங்களேத் தவிர்த்து (விடயம் 2, அட்டவணே II அ-4) மறைமுக வரிகளுக்கும், கையிருப்புகளின் மறைமுக மாற்றங்களுக்கும், புள்ளிவிபரத் தவறுகளுக்கும் (விடயம் 13, அட்டவணே II அ-4) திருத்தி அமைக்கப்பட்ட, செலவுமுறைப்படி நுகர்ச்சியினதும், மூலதன ஆக்கத்தினதும் மதிப்பீடுகளுடன் ஒத்துவரச் செய்யப்பட்டுள்ள, அட்டவணே II அ-2ல் உள்ள IIIம் விடயமாகும்.*

*அத்தாட்சி செய்யப்பட்ட கையிருப்புக்களின் மாற்றம் தேயிலே, இரப்பர், கால்நடை சம்பந்த மானவை மட்டுமே. தனிப்பட்டோர் துறையின் இறக்குமதிக் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற் றங்களுக்கான நம்பகமான விபரங்கள் கிடைக்கவில்லே.

எனவே பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய சாதனங்களின் வருமானத்தில், பொதுப்படையானவோர் 3.0 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. இவற்றின் உபயோகம் மொத்த நுகர்ச்சியில் 3.5 சதவீத அதிகரிப்பையும், ஏற்றுமதிகளில் 3.6 சதவீத அதிகரிப்பையும் ஏற்படுத்தியதாயினும், பொதுப்படையாக மூலதன ஆக்கம் (கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இடம்விட்டு நோக்கும் பொழுது) 1.0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதன் பயனுகவே இவ்வதிகரிப்புகள் ஏற்பட்டன.

**அட்டவணை II அ-9**

**நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவும் கிடைத்த பொருள் வளங்களும்**

| | 1959 | | 1960 | | 1961 | | 1962 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்கள் | (7)ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்கள் | (7)ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்கள் | (7)ம் வரிசையின் சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய்கள் | (7)ம் வரிசையின் சதவீதம் |
| 1. நுகர்ச்சிச் செலவு: தனிப்பட்டோர் .. | 4,579 | 72·0 | 4,837 | 74·5 | 4,728 | 72·7 | 4,908 | 73·7 |
| 2. நுகர்ச்சிச் செலவு: அரசாங்கம் .. | 897 | 14·1 | 963 | 14·8 | 968 | 14·9 | 985 | 14·8 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனிப்பட்டோர் துறையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் .. .. | 691 | 10·9 | 611 | 9·4 | 602 | 9·3 | 601 | 9·0 |
| 4. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: பொது முயற்சிகள்<br>5. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கம் .. | 385 | 6·1 | 325 | 5·0 | 312 | 4·8 | 304 | 4·6 |
| 6. மொத்த உள்நாட்டுச் செலவு .. | 6,551 | 103·1 | 6,736 | 103·7 | 6,609 | 101·6 | 6,799 | 102·0 |
| 7. மொத்த தேசிய உற்பத்தி (திருத்தியமைக்கப்பட்டது)* .. | 6,355 | 100·0 | 6,494 | 100·0 | 6,505 | 100·0 | 6,664 | 100·0 |
| 8. (7)ல் இருந்து (6) மேலதிகமாய்க் கொண்டுள்ளதைப் பின்வரும் விடயங்கள் நிரப்புகின்றன .. | | | | | | | | |
| (அ) வெளிநாட்டிலுள்ள முதலீடுகளின் கரைவு(நிகர) .. | 208 | 3·3 | 221 | 3·4 | 94 | 1·4 | 124 | 1·9 |
| (ஆ) சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருமானங்கள் .. | — 12 | —0·2 | 22 | 0·3 | 11 | 0·2 | 11 | 0·2 |
| (அ) + (ஆ) .. | 196 | 3·1 | 242 | 3·7 | 105 | 1·6 | 135 | 2·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*மொத்தத் தேசிய செலவு பற்றி அட்டவணை II அ-3ல் இருந்து எடுக்கப்பட்ட ஏனைய விடயங்களுடன் இவ்விடயம் ஒரே சீராக விளங்கும்படியாக, அட்டவணை II அ-4ன் விடயம் 3ற் காட்டப்பட்டுள்ள, நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்திக்கான எண்கள், அவ்வட்டவணையின் 13ம் விடயத்தாற் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

சர்வதேசக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில், இந் நாடு "வரவுக்கு மிஞ்சிய" செலவுடையதாக வாழ்கிறதா என்பதற்கு, அட்டவணை II அ-9 பதில் தர எத்தனிக்கின்றது. இவ்வட்டவணையில் 1லிருந்து 5 வரையுள்ள விடயங்கள் மொத்த உள் நாட்டுச் செலவின் தொகுதிகளைத் தருகின்றன. விடயம் 7, சந்தை விலை களின்படி மொத்தத் தேசிய உற்பத்தியைக் காட்டுகின்றது; அதாவது நடை முறை உற்பத்தி முயற்சியின் பயனுக நாட்டிற்குச் சேருகின்ற பொருள்வளங் களைக் காட்டுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து மொத்த உள் நாட்டுச் செலவு மேலதிகமாய் உள்ள அளவிற்கு வெளிநாட்டிலுள்ள முதலீட் டிழப்பு மூலம் (வெளிநாட்டிலுள்ள இருப்புச் சொத்துக்களைக் குறைப்பதனுல் அல்லது பொறுப்புகளை அதிகரிப்பதினுல்), அல்லது சர்வதேச நன்கொடை களினதும் மாற்றங்களினதும் நிகர வருமானங்களினுல், இவ்வேறுபாடு ஈடு செய்யப்படல் வேண்டும். அட்டவணையில் உள்ளபடி மொத்தத் தேசிய உற் பத்தியிலும் பார்க்க மொத்த உள்நாட்டுச் செலவு, 1959ம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியின் 3.1 சதவீதத்திற்குச் சமமான தொகையாலும், 1960ம் ஆண்டில் 3.7 சதவீதத்தாலும், 1961ம் ஆண்டில் 1.6 சதவீதத்தாலும், 1962ம் ஆண்டில் 2.0 சதவீதத்தாலும், மேலதிகமாய் விளங்கியது. மேற் கூறிய ஒவ்வொரு வருடத்திலும் ஏற்பட்ட மேலதிகம், முழுமையாக நிகர வெளிநாட்டு முதலீட்டழிப்பு மூலம் ஈடுசெய்யப்பட்டது. 1959ம் ஆண்டு தவிர ஏனைய வருடங்களில் மிகச் சிறிய அளவில் மட்டுமே சர்வதேச நன் கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருமானங்களினுல், இது ஈடு செய்யப்பட்டது.

மேலும் அட்டவணை II அ-9, பொருள் வளங்களின் உபயோகத்தின் அமைப்பைக் காட்டும் வகையில் மொத்த உள்நாட்டுச் செலவின் தொகுதிகளை, மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதங்களாகக் காட்டுகின்றது. முந்தைய ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 87.6 சதவீதமாக விளங்கிய மொத்த நுகர்ச்சி, 1962ம் ஆண்டு 88.5 சத வீதத்திற்கு உயர்ந்தது. இதற்கு எதிராக மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் முந்தைய ஆண்டிற்குரிய 14.1 சத வீதத்திலிருந்து 1962ம் ஆண்டு 13.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆகவே 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டு, மூலதன ஆக்கத்தி லிருந்து நுகர்ச்சிக்கு ஒருசிறு மாற்றம் ஏற்பட்டிருப்பதை இவ்வெண்கள் காட்டுகின்றன.

வெவ்வேறு தொகுதிகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவின் இறக்கு மதிப் பங்கை அட்டவணை II அ-10 ஆராய்கின்றது. தனிப்பட்டோர் நுகர்ச்சி, அரசாங்க நுகர்ச்சி, மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம், கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியனவற்றின் மேலுள்ள செலவுகள் தனித்தனியே காட்டப்பட்டுள்ளன. கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலைகளின்படியும், சந்தை விலைகளின்படியும் மொத்த உள்நாட்டுச் செலவினது தொகுதிகள் ஒவ்வொன்றும் அச்செல வினது இறக்குமதிப் பங்கைக் காண்பிக்கின்றன. இவ்விறக்குமதி அடக்கத்தின் பரிசீலனையிலிருந்து வெளியாகும் விரும்பத்தக்க குறிப்பு என்னவெனில்,

அட்டவணை II அ-10

## மொத்தத் தேசிய செலவில் இறக்குமதிகளின் பங்கு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | | | | 1960 | | | | 1961 | | | | 1962 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்தத் தேசிய நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களின் மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்தத் தேசிய நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களின் மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்தத் தேசிய நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களின் மாற்றம் | தனிப்பட்டோர் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்தத் தேசிய நிலையான மூலதன ஆக்கம் | கையிருப்புக்களின் மாற்றம் |
| 1. செலவு (சந்தை விலைகளின்படி) .. | 4,579 | 897 | 1,033 | +43·5 | 4,837 | 963 | 967 | —31·4 | 4,728 | 968 | 904 | +10·2 | 4,908 | 985 | 985 | —80·1 |
| 2. இறக்குமதிகளின் பங்கு (கொ. கா. க. விலைகளின்படி) | | | | | | | | | | | | | | | | |
| (அ) தொகை .. | 1,449 | 87 | 372 | +63·8 | 1,410 | 125 | 365 | —13·4 | 1,199 | 70 | 309 | —64·5 | 1,149 | 56 | 358 | —87·1 |
| (ஆ) சதவீதமாக .. | 31·6 | 9·7 | 36·0 | | 29·2 | 12·9 | 37·8 | | 25·4 | 7·2 | 34·2 | | 23·4 | 5·7 | 36·3 | |
| 3. இறக்குமதிகளின் பங்கு (சந்தைப் பெறுமானப்படி*) | | | | | | | | | | | | | | | | |
| (அ) தொகை .. | 1,971 | 89 | 518 | +63·8 | 2,084 | 127 | 496 | —13·4 | 1,860 | 72 | 436 | —64·5 | 1,912 | 58 | 504 | —87·1 |
| (ஆ) சதவீதமாக .. | 43·0 | 9·9 | 50·2 | | 43·1 | 13·2 | 51·3 | | 39·3 | 7·5 | 48·2 | | 38·9 | 5·8 | 51·2 | |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*அரசாங்க இறக்குமதிகளும், இறக்குமதிப் பண்டங்களின் கையிருப்புக்களது மாற்றமும், கொ. கா. க. விலைகளின்படி கணக்கிடப்பட்டுள்ளன. ஏனைய இறக்குமதிப் பண்டங்கள் யாவும் சில்லறை விலைகளின்படியே கணிக்கப்பட்டிருக்கின்றன.

கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலைகளிற் தனிப்பட்டோர் நுகர்ச்சி, 1959ம் ஆண்டில் இருந்த 31.6 சதவீதத்திலிருந்து 1962ம் ஆண்டு 23.4 சதவீதத்திற்குத் தளராத ஓர் வீழ்ச்சியைக் காட்டியதே. சந்தைப் பெறுமானத்தின்படி இவ்வீழ்ச்சி குறைவாகவே இருந்தது. அதாவது 1959ம் ஆண்டு 43.0 சதவீதத்தில் இருந்து, 1962ம் ஆண்டு 38.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலைகளுக்கு எதிராகச் சந்தை விலைகளின்படி தனிப்பட்டோர் நுகர்ச்சியின் இறக்குமதி அடக்கத்தில் ஏற்பட்ட சிறிய வீழ்ச்சி வீதம் ஆச்சரியப்படுவதற் குரியதல்ல; ஏனெனில் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்ச்சிப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட அதிகரித்த இறக்குமதிவரி விகிதங்களே இதற்குக் காரண மாகும். அரசாங்க நுகர்ச்சியின் இறக்குமதி அடக்கம், 1959ம் ஆண்டிலும் பார்க்க 1960ம் ஆண்டில் உயர்ந்துள்ளது எனினும், 1960ம் ஆண்டிலிருந்து அது ஒரு வீழ்ச்சிப் போக்கைக் காட்டியது. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் இறக்குமதி அடக்கத்தைப் பரிசோதித்துப் பார்க்கையில் நியாயமான அளவு கொண்ட உறுதிப்பாட்டை இவ்வெண்கள் பிரதிபலிக்கின்றன. எனினும் இவ்வுறுதிப்பாடு உண்மையிலும் பார்க்க ஒரு வெளித் தோற்றமானது என்பது, மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்ட அடிப்படைகளிலிருந்து பிரதிபலிக்கின்றது. ஏனெனில் மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் பெரிய அளவான தொகுதிகள், மறைமுக முறைகளைப் பாவிப்பதன் மூலம் பெறப்பட்ட கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படையுடைய இறக்குமதிப் பெறுமானங்களுடன், இணைகின்றன.

## கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

கைத்தொழில் மூலங்களின்படி பாகுபடுத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி, நடைமுறைச் சிலைக்கொள்விலைகளின்படி அட்டவணை II அ-11ற் கொடுக்கப்பட்டுள்ளது.

1962ம் ஆண்டின் உற்பத்திப் பெறுமானத்தில் ஏற்பட்ட மிகக்கூடிய வீத அதிகரிப்பு, தயாரிப்புத் (கட்டட ஆக்கப் பொருட்களைத் தவிர்த்து) துறையில் ஏற்பட்டிருப்பதை இவ்வட்டவணை காட்டுகின்றது. பின்வரும் துறைகளிலும் உயர்ந்த அதிகரிப்பு வீதங்கள் பதிவு செய்யப்பட்டன:— ''சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும்'' ''போக்குவரத்து, களஞ்சியம், செய்தியறிவிப்பு'', ''அரசாங்கப் பரிபாலனமும், பாதுகாப்பும்'', ''வங்கித்தொழில், காப்புறுதி, ஏனைய நிதித் தொழில்கள்'' ஆகியன. 1962ம் ஆண்டில் நெல் உற்பத்தியும் மீன் உற்பத்தியும் உச்சநிலையை அடைந்திருந்த போதிலும், ''விவசாயம், வனவியல், கால்நடை, மீன்பிடித்தல்'' ஆகிய துறையில், 2.1 சதவீத அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டது. ஏற்றுமதிக்கான உற்பத்தியின் பெறுமானத்தில் ஏற்பட்ட மிகக்குறைந்த வீத அதிகரிப்புத் தான், இத்துறையில் ஏற்பட்ட பொதுப்படையான அதிகரிப்பு வீதம் குறைவுற்றமைக்குக் காரணமென்பது தெளிவாகின்றது.

## அட்டவணை II அ-11

### நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி, கைத்தொழில் மூலங்களின்படி.

| கைத்தொழில் | 1959 | | 1960 | | 1961 | | 1962 | | சதவீத மாற்றங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய் களில் | சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய் களில் | சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய் களில் | சதவீதம் | பத்து இலட்சம் ரூபாய் களில் | சதவீதம் | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| I. விவசாயமும், வனவியலும், வேட்டையாடுதலும், மீன் பிடித்தலும்* .. .. | 2,771 | 47·2 | 2,877 | 47·4 | 2,858 | 46·8 | 2,916 | 45·9 | + 3·8 | — 0·7 | + 2·1 |
| II. சுரங்கத் தொழிலும், பார்க்குழித் தொழிலும் .. .. .. .. | 11 | 0·2 | 11 | 0·2 | 11 | 0·2 | 12 | 0·2 | — | — | +10·3 |
| III. தயாரிப்புகள் (கட்டட ஆக்கப் பொருட்களைத் தவிர்த்து) .. .. .. | 267 | 4·5 | 315 | 5·2 | 351 | 5·7 | 417 | 6·6 | +18·0 | +11·4 | +18·7 |
| IV. கட்டட ஆக்கத் தொழில் (கட்டட ஆக்கப் பொருட்களையும் சேர்த்து) .. .. | 392 | 6·7 | 354 | 5·8 | 352 | 5·7 | 367 | 5·8 | — 9·5 | — 0·8 | + 4·4 |
| V. போக்குவரத்தும், களஞ்சியமும், செய்தி அறிவிப்பும் .. .. ... | 451 | 7·7 | 474 | 7·8 | 469 | 7·7 | 505 | 7·9 | + 5·1 | — 1·0 | + 7·6 |
| VI. மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும் .. .. .. .. | 637 | 10·8 | 646 | 10·7 | 615 | 10·1 | 641 | 10·1 | + 1·5 | — 4·8 | + 4·2 |
| VII. வங்கித் தொழிலும், காப்புறுதிகளும், ஏனைய நிதிகளும் .. .. .. .. | 48 | 0·8 | 52 | 0·9 | 56 | 0·9 | 59 | 0·9 | + 8·6 | + 7·7 | + 5·7 |
| VIII. குடியிருப்புக்களின் உடமை .. .. | 169 | 2·9 | 178 | 2·9 | 196 | 3·2 | 205 | 3·2 | + 5·9 | + 9·9 | + 4·5 |
| IX. அரசாங்கப் பரிபாலனமும், பாதுகாப்பும் .. | 386 | 6·6 | 372 | 6·1 | 400 | 6·6 | 428 | 6·7 | — 3·8 | + 7·8 | + 6·8 |
| X. சேவைகள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | | | | | | | | | | | |
| (அ) அரசாங்க மருத்துவ, சுகாதார, கல்வி, ஒலிபரப்பு, வானமண்டல சாஸ்திர சேவைகள் .. .. .. | 315 | 5·4 | 353 | 5·8 | 356 | 5·8 | 348 | 5·5 | +12·0 | + 1·0 | — 2·3 |
| (ஆ) ஏனைய சகல சேவைகள் .. .. | 426 | 7·3 | 432 | 7·1 | 443 | 7·3 | 458 | 7·2 | + 1·3 | + 2·7 | + 3·4 |
| மொத்தம் .. .. .. | 741 | 12·6 | 784 | 12·9 | 799 | 13·1 | 806 | 12·7 | + 5·9 | + 1·9 | + 0·9 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி.. .. | 5,872 | 100·0 | 6,064 | 100·0 | 6,107 | 100·0 | 6,356 | 100·0 | + 3·3 | + 0·7 | + 4·1 |

*விவசாய ஏற்றுமதிப் பொருட்களின் பதனீடுகளையும் சேர்த்துள்ளது.

மூலம்: இலங்கை மகா வங்கி.

உற்பத்தித் துறைகளின் அமைப்பு சம்பந்தமாக, 1960ம் ஆண்டு தொடக்கம் விவசாயத்துறையின் பங்கு சிறிது வீழ்ச்சியடைந்துகொண்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1960ம் ஆண்டில் இத்துறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 47.4 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்ததெனினும், அது 1962ம் ஆண்டில் 45.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு எதிர்மாறாகத் தயாரிப்புத் துறையின் பங்கு, 1960ம் ஆண்டில் இருந்த 5.2 சதவீதத்தில் இருந்து, 1962ம் ஆண்டில் 6.6 சதவீதத்திற்கு ஒரு சிறு உயர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. விவசாயத்துறையிலும், தயாரிப்புத் துறையிலும் காணப்பட்ட இச்சிறு மாற்றப்போக்கைத் தவிர உற்பத்தித் துறைகளின் பொது அமைப்பு, 1959ல் இருந்து 1962 வரை நியாயமான அளவு உறுதியாகவே இருந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

## உண்மை உற்பத்தியும், உண்மை வருமானமும் உண்மைச் செலவும்

நிலையான 1959ம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் நம்பகமான மதிப்பீடுகள், அட்டவணை II அ-12ற் தரப்பட்டுள்ளன. உண்மை நியதியின்படி மதிப்பீடுகள் பெறுவதற்காக, இவ்வட்டவணையின் விடயத் தொகுதிகளில் ''ஏற்றுமதிக்கான உற்பத்தி,'' ''அரசாங்கம்,'' ''நெல்'' ஆகியவையும், உள்நாட்டு உபயோகத்திற்கான தேயிலை, தேங்காய் ஆகியவற்றின் உற்பத்தியும் மட்டுமே, விரிவான அடிப்படையிற் கணிக்கப்பட்டுள்ளன. திருப்திகரமான விலைக்குறிகாட்டிகள் கிடைக்காததின் நிமித்தம், உள்நாட்டு உபயோகத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஏனைய சகல பொருட்களும் சேவைகளும் ஒருங்கே கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் ''உள்நாட்டுத் தொகுதி'', என்ற உபகுறிகாட்டியினுற் சுருக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II அ-12

**நிலையான 1959ம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

| | நிலையான 1959ம் ஆண்டுப், பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960 | 1960ல் இருந்து 1961 | 1961ல் இருந்து 1962 |
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்; ஏற்றுமதி விலைப்படி .. .. | 1,692 | 1,778 | 1,862 | 1,995 | + 5·1 | + 4·7 | + 7·2 |
| கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றம் .. .. | ... | — 34 | + 18 | — 41 | | | |
| இறக்குமதி செய்து பாவிக்கப்பட்ட பொருட்கள் நீக்கி (சந்தைப் பெறுமானம்) .. | —121 | —119 | —130 | —145 | | | |
| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகச் செலவு (நீக்கி) .. .. | —104 | —108 | —110 | —118 | | | |
| நிகர உற்பத்தி .. .. | 1,467 | 1,517 | 1,639 | 1,692 | + 3·4 | + 8·1 | + 3·2 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள் கூட்டி .. | 3 | 2 | 2 | 2 | —20·0 | — | — |
| **II. உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி (நிகர உற்பத்தி)** .. | **1,470** | **1,519** | **1,642** | **1,694** | **+ 3·3** | **+ 8·1** | **+ 3·2** |
| (i) நெல், தேயிலை, தெங்குப் பொருட்கள் .. .. | 641 | 722 | 731 | 795 | +12·6 | + 1·2 | + 8·8 |
| (ii) அரசாங்கம் (மு.சே.ப.) .. | 701 | 724 | 757 | 776 | + 3·3 | + 4·5 | + 2·5 |
| (iii) ஏனைய பொருட்களும் சேவைகளும் .. .. | 3,060 | 3,124 | 3,114 | 3,234 | + 2·1 | — 0·3 | + 3·9 |
| **மொத்தம்** .. .. | **4,402** | **4,571** | **4,601** | **4,805** | **+ 3·8** | **+ 0·7** | **+ 4·4** |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி** .. | **5,872** | **6,089** | **6,242** | **6,498** | **+ 3·7** | **+ 2·5** | **+ 4·1** |
| **IV. வெளிநாட்டிலிருந்து வந்த நிகர சினைவருமானம்** .. | **— 37** | **— 44** | **— 40** | **— 46** | | | |
| **V. மொத்தத் தேசிய உற்பத்தி** .. | **5,835** | **6,045** | **6,202** | **6,452** | **+ 3·6** | **+ 2·6** | **+ 4·0** |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1962ல் உள்நாட்டு ஏற்றுமதிகளின் உண்மைப் பெறுமானம் 7.2 சத வீதத்தால் அதிகரித்ததென்பதும், இது முந்தைய இரு ஆண்டுகளிலும் பார்க்கக் கூடிய அதிகரிப்பு வீதம் என்பதும் இவ்வட்டவணையிலிருந்து தெளிவாகின்றது. எனினும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட இவ் உயர்ந்த அதிகரிப்பிற்குக் கையிருப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஒரு காரணமாகும். 1962ம் ஆண்டில் ஏற்றுமதிக்கான உண்மை உற்பத்தியின் உண்மைப் பெறுமானம் 3.2 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இது, 1961ன் ஏற்றுமதிக்கான உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட 8.1 சதவீத அதிகரிப்பிற்கு எதிரானதாகும். உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்தி சம்பந்தமாக, நெல், தேயிலை, தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியனவற்றிற்கு இது ஓர் சாதகமான வருடமாகும். பணநியதியின்படி, 1962ம் ஆண்டிற்கான பொதுப்படை அதிகரிப்பு 5.8 சதவீதமாக இருந்த பொழுதிலும், உண்மை நியதியின்படி இவற்றின் அதிகரிப்பு 8.8 சதவீதமாகும்.* 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 8.8 சதவீத உண்மை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் முந்தைய ஆண்டில் 1.2 சதவீத அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டது. உள்நாட்டு உபயோகத்திற்கான பொருட்களும் சேவைகளும் (அட்டவணை விடயம் 2 (iii)) சம்பந்தமாக முன்னர் கூறிய அடிப்படையிற் சுருக்கிய பின்னர் பார்க்கும் பொழுது, உண்மை நியதியின்படியான உற்பத்தி, 1961ல், 0.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதிற்கு எதிராக 1962ல், 3.9 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

உண்மை நியதியின்படி, 1962ம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 4.0 சதவீதத்தால் அதிகரித்ததை இவ்வட்டவணை காட்டுகின்றது. இது 1960ம் ஆண்டிலும், 1961ம் ஆண்டிலும் முறையே பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பு வீதங்களாகிய 3.6 சதவீதத்திலும், 2.6 சதவீதத்திலும் பார்க்கச் சிறந்ததாகும். சராசரி ஆளுக்கான அடிப்படையில் 1962ம் ஆண்டின் உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட 1.3 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 1960ல், 0.8 சதவீத அதிகரிப்பும், 1961ல், 0.2 சதவீத வீழ்ச்சியும் ஏற்பட்டன.

அட்டவணை II அ-13ல், 1959ம் ஆண்டு விலைகளின்படி தரப்பட்டுள்ள மொத்தத் தேசிய வருமானமும், மொத்தத் தேசிய செலவும்,

**அட்டவணை II அ-13**

**உண்மையான தேசிய வருமானமும் செலவும்**

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960 | 1960ல் இருந்து 1961 | 1961ல் இருந்து 1962 |
| 1. நிலையான 1959ம் ஆண்டு சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி .. .. .. | 5,835 | 6,045 | 6,202 | 6,452 | +3·6 | +2·6 | +4·0 |
| 2. ஏற்றுமதிகளில் ஏற்படும் வர்த்தக மாற்றுவிகிதப் பயன் | | | | | | | |
| (i) தேயிலை .. .. | — | — 26 | — 38 | + 2 | | | |
| (ii) இரப்பர் .. .. | — | + 39 | — 25 | — 13 | | | |
| (iii) தெங்கு .. .. | — | — 33 | —111 | — 96 | | | |
| (iv) ஏனைய .. .. | — | + 6 | + 1 | + 5 | | | |
| (v) சகலதும் .. .. | — | — 14 | —173 | —102 | | | |
| 3. நிலையான 1959ம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய வருமானம் .. .. | 5,835 | 6,031 | 6,030 | 6,351 | +3·4 | ... | +5·3 |
| 4. மானியங்கள் தவிர்த்த மறைமுக வரிகள் (சீராக்கம்) .. | 389 | 402 | 402 | 423 | | | |
| 5. நிலையான 1959ம் ஆண்டுச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய செலவு .. | 6,224 | 6,433 | 6,432 | 6,774 | +3·4 | ... | +5·3 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ல், உண்மை நியதியின்படி, இப்பொருட்களில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு வீதத்திற்குத் தாழ்ந்த, உற்பத்தியாளர்களின் விலைகளே காரணமாகும். உதாரணமாக, ஒரு புசல் நெல்லுக்கான சராசரி உற்பத்தியாளர் விலை, 1961ல் இருந்த ரூபாய் 11.53 சதத்துடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டு ரூபாய் 10.59 சதமாக விளங்கியது. ஒரு தேங்காயின் சராசரி விலை, 1961ல் இருந்த 14.86 சதத்துடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டு 12·85 சதமாக விளங்கியது. (இவ்விபரங்கள் குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினுற் கொடுக்கப்பட்டது.).

அட்டவணை II அ-12ல், நிலையான 1959ம் ஆண்டு விலைகளின்படி உள்ள மொத்தத்தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகளில் இருந்து, கிடைக்கப்பெற்றன. 1959ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1960ல் இருந்து 1962 வரையுள்ள ஒவ்வொரு வருடத்திலும் வர்த்தக மாற்று விகிதத்தின் சாதகமற்ற தன்மையின் பயனாக, 1959ம் ஆண்டு விலைகளின்படி மொத்தத் தேசிய வருமானம், மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்கத் தாழ்ந்ததாகவே காணப்பட்டது. எனினும், 1962ம் ஆண்டில் உண்மையான தேசிய வருமானம் 5.3 சதவீதத்தால் உயர்ந்ததெனினும் உண்மைத் தேசிய உற்பத்தி 4.0 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. அடிப்படைக் கணித்தல் முறை, சினைக்கொள்விலைகளிலிருந்து சந்தைவிலைகளுக்கு மாற்றப்பட்டாலொழிய உண்மை நியதியின்படியான தேசிய செலவைத் தேசிய வருமானத்திலிருந்து வேறுபடுத்த முடியாது. எனவே, உண்மைத் தேசிய செலவில் 1962ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்பின் அளவும் 5.3 சதவீதமாகும்.

## உற்பத்தியும் ஏற்றுமதிகளும்

நடைமுறை விலைகளிலும், நிலையான 1959ம் ஆண்டு விலைகளிலும், ஏற்றுமதி விலைகளின்படி ஏற்றுமதிப் பெறுமானங்களில் ஏற்பட்ட நடமாட்டங்கள், அட்டவணை II அ-14ற் காட்டப்பட்டுள்ளன. உள்நாட்டு ஏற்றுமதிகளுக்கு, 1962ம் ஆண்டு, ஓர் சாதகமான வருடமாக இருந்ததைக் காணலாம். சிறிது தாழ்ந்த விலைகள் கிடைத்த பொழுதிலும் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமானம் 3.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் இவ்வதிகரிப்பு 6.0 சதவீதமாகும். இரப்பரின் ஏற்றுமதிப் பெறுமானத்தில் 1961ம் ஆண்டு கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டபொழுதிலும், 1962ம் ஆண்டில் நியாயமான அளவு சீர்த்திருத்தம் ஏற்பட்டது. ஆயினும், இது 1960ம் ஆண்டில் எய்திய உயர்ந்த மட்டத்தை அடையவில்லை. முந்தைய ஆண்டிற் பார்க்க 1962ம் ஆண்டில் ஏற்பட்ட சீர்திருத்தம் நடைமுறை விலைகளில், 11 சதவீதமாகும். நிலையான 1959ம் ஆண்டு விலைகளில் இது 13 சதவீதத்திற்குச் சிறிது அதிகமாகும். தெங்குப் பொருட்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான உற்பத்தி அதிகரிப்பின் பயனாக, 1961லும் பார்க்க 1962ம் ஆண்டில், 270 இலட்சம் ரூபாய்கள் அதிகரித்த செலாவணியாகக் கிடைத்தன.

பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் பற்றியும், நெல் உற்பத்தி பற்றியும், விரிவான குறிப்புகள் பின் தொடருகின்றன.

## தேயிலை

திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி, 1961ம் ஆண்டு முடிவில் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்த 587,401 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டு முடிவில் 592,118 ஏக்கர்கள் தேயிலை, உற்பத்தியின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. 1961ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 4550 இலட்சம் இறாத்தல்களுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்தத் தேயிலை உற்பத்தி 4670 இலட்சம் இறாத்தல்களாகும். (அட்டவணை II அ-15தைப் பார்க்கவும்). இவ்வாண்டு தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட சிறிய அதிகரிப்புடன் (120 இலட்சம் இறாத்தல்கள்) ஒப்பிடுகையில், தேயிலை ஏற்றுமதித் தொகை, 260 இலட்சம் இறாத்தல்களால் அதிகரித்துள்ளது. உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு வீதத்திற்குக் கையிருப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

## அட்டவணை II அ - 14

### ஏற்றுமதி விலைகளின்படி கணிக்கப்பட்டுள்ள ஏற்றுமதிப் பெறுமானங்கள்

| | நடைமுறை விலைகள் | | | | | | | நிலையான 1959ம் ஆண்டு விலைகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீத மாற்றங்கள் | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | சதவீத மாற்றங்கள் | | |
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு | 1959 | 1960 | 1961 | 1962 | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| **உள்நாட்டு ஏற்றுமதிகள்** | | | | | | | | | | | | | | |
| தேயிலை .. .. | 1,045 | 1,096 | 1,114 | 1,148 | + 4·9 | + 1·7 | + 3·1 | 1,045 | 1,115 | 1,158 | 1,228 | + 6·7 | + 3·9 | + 6·0 |
| இரப்பர் .. .. | 298 | 378 | 260 | 290 | +27·1 | —31·3 | +11·5 | 298 | 337 | 286 | 324 | +13·3 | —15·2 | +13·3 |
| தேங்காயும் தெங்கு உற்பத்திப் பொருட்களும் .. | 285 | 238 | 247 | 274 | —16·5 | + 2·7 | +10·9 | 285 | 270 | 359 | 389 | — 5·6 | +33·2 | + 8·4 |
| ஏனையவை .. .. | 64 | 62 | 59 | 54 | — 3·5 | — 5·1 | — 8·5 | 64 | 56 | 59 | 53 | —11·7 | + 4·4 | —10·2 |
| மொத்தம் .. | 1,692 | 1,775 | 1,681 | 1,766 | + 4·9 | — 5·3 | + 5·1 | 1,692 | 1,778 | 1,862 | 1,995 | + 5·1 | + 4·7 | +7·1 |
| **திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் — மொத்தம்** | 62 | 57 | 52 | 42 | — 7·9 | — 7·9 | —19·2 | 62 | 63 | 57 | 49 | + 1·6 | — 9·5 | —14·0 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களும், இலங்கை மகா வங்கியும்.

*1962ம் ஆண்டு உற்பத்தியில் ஏற்பட்ட 120 இலட்சம் இருத்தல் அதிகரிப்பு, முந்தைய இரு ஆண்டுகளிலும் முறையே பதிவு செய்யப்பட்ட 200 இலட்சம் இருத்தல்களிலும், 220 இலட்சம் இருத்தல்களிலும் பார்க்கப் பெருமளவு தாழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 2.6 சதவீத அதிகரிப்பிற்கு எதிராகக் கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட சராசரி அதிகரிப்பு 3.8 சதவீதமாகும்.*

*ஒரு ஏக்கருக்கான சராசரித் தேயிலை விளைச்சல், 1962ம் ஆண்டில் 789 இருத்தல்களாக இருந்தது. இது 1961ல் 775 இருத்தல்களாகவும், 1960ல் 748 இருத்தல்களாகவும் காணப்பட்டது. தேயிலை மாற்று நடுகைத் திட்டத்தை நடைமுறையாக்குவதில் ஊக்கமின்மை காணப்பட்ட பொழுதிலும் விளைச்சல்கள் தொடர்ச்சியாக அதிகரித்தமைக்குக் காரணம் வளமாக்கிகளின் பாவிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். 1961ல், மாற்று நடுகை செய்யப்பட்ட பிரதேசமாகிய 1,298 ஏக்கர்களிலும் பார்க்க, 1962ல் மாற்று நடுகை செய்யப்பட்ட பிரதேசமாகிய 1,769 ஏக்கர்கள், சிறிதளவு மட்டுமே கூடியதாகும். தேயிலைப் புனர்நடுகையும், மாற்றுநடுகையும் ஒருங்கே 1961ல் இருந்த 4,028 ஏக்கர்களில் இருந்து 4211 ஏக்கர்களுக்கு 1962ல் அதிகரித்தன.*

## இரப்பர்

*1961ம் ஆண்டு முடிவிலிருந்த 669,013 ஏக்கர்களுடன் ஒப்பிடுகையிற் தற்காலிக மதிப்பீடுகளின்படி, 1962ம் ஆண்டில் இரப்பர் உற்பத்திக்குக் கீழ் இருந்த பிரதேசம், 669,129 ஏக்கர்களாகும். 1961ல், மானியத்திட்டத்தின் கீழ் மாற்று நடுகை செய்யப்பட்ட பிரதேசத்தின் எண்ணுகிய 18,698 ஏக்கர்களுக்கு எதிராக 1962ல் 17,959 ஏக்கர்கள் மாற்று நடுகை செய்யப்பட்டன. இம்மானியத்திட்டம் ஆரம்பமாகிய 1953ம் ஆண்டு தொடக்கம் மாற்று*

### அட்டவணை II அ-15

### பிரதான விவசாயப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்ட தொகைகள்

| பொருள் | 1959 | 1960 | 1961 | 1962 | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1959ல் இருந்து 1960ம் ஆண்டு | 1960ல் இருந்து 1961ம் ஆண்டு | 1961ல் இருந்து 1962ம் ஆண்டு |
| தேயிலை (பத்து இலட்சம் இருத்தல்கள்) .. | 413 | 435 | 455 | 467 | + 5·3 | + 4·6 | + 2·6 |
| இரப்பர் (பத்து இலட்சம் இருத்தல்கள்) .. | 205 | 218 | 215 | 229 | + 6·3 | — 1·4 | + 6·5 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள்* (தேங்காய் நியதிப்படி பத்து இலட்சம் காய்களில்) | 2,313 | 2,183 | 2,601 | 2,811 | — 5·6 | +19·1 | + 8·1 |
| நெல் (பத்து இலட்சம் புசல்கள்) .. .. | 36·5 | 43·1 | 43·2 | 48·1 | +17·8 | + 0·5 | +11·1 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கை, இரப்பர்க் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கை, குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை மகா வங்கி.

*கொப்பரா, தேங்காய்த் துருவல்; தேங்காய் எண்ணெயும், தேங்காய்களும்.

நடுகை செய்யப்பட்ட மொத்தப் பிரதேசம், இத்துடன் 193,266 ஏக்கர்கள் ஆகின்றது. இம்மாற்று நடுகைத் திட்டம் ஆரம்பமாகும் பொழுது 200,000 ஏக்கர்களைக் குறிக்கோளாகக் கொண்டதெனினும், உண்மையில் மாற்றுநடுகை செய்யப்பட்ட பிரதேசம் இக்குறிக்கோளில் இருந்து 6,700 ஏக்கர்கள் குறைந்ததாகும்.

1962ல், 2290 இலட்சம் இருத்தல்களாக விளங்கிய இரப்பர் உற்பத்தி—1958ம் ஆண்டிற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட உச்சமட்டம்—முந்தைய ஆண்டிலும் பார்க்க 140 இலட்சம் இருத்தல்கள் அல்லது 7 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரிப்பு, மாற்று நடுகையும், புனர்நடுகையும் செய்யப்பட்ட இரப்பர் பயனளிக்கத் தொடங்கியதன் பயனைக் கிடைத்த உயர்ந்த விளைச்சல்களைப் பிரதிபலிக்கின்றது. புரட்டாதியிலும், ஐப்பசியிலும் தொடர்ச்சியாகப் பெருமழை ஏற்பட்டதன் பயனை வடித்தற் தொழிலிற் தடை ஏற்பட்டிருந்த பொழுதிலும் இவ்வதிகரிப்புக் கிடைக்கப் பெற்றது.

1960ம் ஆண்டு 2350 இலட்சம் இருத்தல்களாகவும், 1961ம் ஆண்டு 1970 இலட்சம் இருத்தல்களாகவும் விளங்கிய இரப்பர் ஏற்றுமதிப் பெறுமதி அள்வுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டில் இது 2240 இலட்சம் இருத்தல்களாக விளங்கியது. 1961ம் ஆண்டிலும் பார்க்க 1962ம் ஆண்டில் சராசரி விலை சிறிது தாழ்ந்ததாக இருந்ததெனினும், ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாகக் கிடைத்த பெறுமானம், 300 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது.

## தெங்கு

1961ம் ஆண்டில் 26,010 இலட்சம் காய்களாக விளங்கிய தெங்கு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 1962ல் இவ்வுற்பத்தி 28,110 இலட்சம் காய்களென மதிப்பிடப்பட்டுள்ளது. காய் நியதியின்படி (12,800 இலட்சம் காய்களென மதிப்பிடப்பட்டுள்ள) உள்நாட்டு நுகர்ச்சியையும், (15,310 இலட்சம் காய்களென மதிப்பிடப்பட்டுள்ள) ஏற்றுமதிகளையும் இவ்வுற்பத்தி மதிப்பீடு கொண்டுள்ளது. 1961ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 4180 இலட்சம் காய்கள் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகை 2100 இலட்சம் காய்களாகும். முந்தைய ஆண்டைப்போல் உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு, வளமாக்கிகளின் பாவிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பும் சாதகமான வானிலையுமே காரணங்களாகும். காய் நியதியின்படி மூன்று தெங்கு உற்பத்திப் பொருட்களினதும்—தேங்காய் எண்ணை, தேங்காய்த் துருவல், கொப்பரா—மொத்த ஏற்றுமதிகள், 1961ல் இருந்த 13,550 இலட்சம் காய்களிலிருந்து 1962ல், 15,300 இலட்சம் காய்களுக்கு அதிகரித்தன. 1962ற் கிடைக்கப்பெற்ற பெறுமானமாகிய 2270 இலட்சம் ரூபாய்கள், 1961ம் ஆண்டிலும் பார்க்க, 12 சதவீதத்தால் உயர்ந்ததாகும்.

## நெல்

தற்காலிகமான மதிப்பீடுகளின்படி, 1962ம் ஆண்டுக்கான மொத்த நெல் உற்பத்தி, 481 இலட்சம் புசல்களாகும். இது முந்தைய ஆண்டிற் பார்க்க 49 இலட்சம் புசல்களால் அதிகரித்துள்ளது. 1960-61ல் 271 இலட்சம் புசல்களாக விளங்கிய பெரும்போக நெல் விளைச்சலுடன் ஒப்பிடுகையில், 1961-62ல் இது 303 இலட்சம் புசல்களாக விளங்கிற்று. 1961ம் ஆண்டு 161 இலட்சம் புசல்களாக விளங்கிய சிறுபோக நெல் விளைச்சலுடன் ஒப்பிடுகையில், 1962ல், 178 இலட்சம் புசல்களாக விளங்கிய 1961-62ல் அருவிவெட்டப்பட்ட, நிகர ஏக்கருக்கு 38.0 புசல்களாக விளங்கிய பெரும்போக நெல் விளைச்சல், 1960-61ல் அருவிவெட்டப்பட்ட நிகர ஏக்கருக்கான சராசரி விளைச்சலாகிய 35.9 புசல்களிலும் பார்க்க நியாயமான அளவு சீர்திருந்தியதாகும். 1961ம் ஆண்டில், 36.5 புசல்களாக விளங்கிய சராசரி சிறுபோக நெல் விளைச்சல், 1962ல், 37.7 புசல்களுக்குச் சிறு அதிகரிப்பைக் காட்டியது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ், 1962ற் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் மொத்தத் தொகையாகிய 253 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில், 1961ல் இது 228 இலட்சம் புசல்களாகும்.

அரிசி நியதியின்படி நெல் உற்பத்தியைக் கணிக்கையில், 1961ம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட தொகையாகிய 561,600 தொன்களுக்கு எதிராக, 1962ம் ஆண்டு, இது 624,900 தொன்களாக விளங்கியது. 1962ம் ஆண்டு உள்நாட்டில் நுகரப்பட்ட அரிசி 1,103,300 தொன்களென மதிப்பிடப்பட்டுள்ளதெனினும், இவ்வருடம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 404,173 தொன்களாகும்.

## தேசிய உற்பத்திக்கும் செலவிற்குமான நுணுக்கமான குறிப்புகள்[1]

இலங்கை மகாவங்கியின் வருடாந்த அறிக்கைகளில் பிரசுரிக்கப்பட்ட புள்ளி விபரங்களைத் தொடர்ச்சியாகச் சீர்திருத்தும் கொள்கைக்கிணங்க, தேசிய உற்பத்தியினதும், செலவினதும், மதிப்பீடுகள் மீண்டும் இவ்வருடம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. எனினும் மதிப்பீடுகளின் அடிப்படையிலுள்ள மூல விபரங்களின் திட்டவட்டத்தன்மையும் உள்ளடக்கமும் பெருமளவு குறைபாடுகளுக்கு ஆளாகின்றபடியால், தற்போதைய மதிப்பீடுகளிலும் இக்குறைவுத் தன்மைகள் உள்ளன. நம்புவது போல் மூலப்புள்ளி விபரத் தரவுகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் எடுக்கப்பட்டால், தேசிய உற்பத்திக்கும், செலவிற்குமான மதிப்பீடுகளில் ஓர் பிரதான சீர்திருத்தம் பிற்காலத்தில் ஏற்படக்கூடும்.

### நடைமுறை விலைகளில் தேசிய உற்பத்தியினதும் செலவினதும் மதிப்பீடுகள்.

நடைமுறை விலைகளின்படியுள்ள தேசிய உற்பத்தியினதும் செலவினதும் மதிப்பீடுகளில் ஏற்பட்ட திருத்தங்கள், ஒருபுறம் அமைப்பிலும் முறையிலும் ஏற்பட்ட மாற்றங்களினுலும், மறுபுறம் திட்டவட்டத்தன்மையினதும் உள்ளடக்கத்தினதும் விபரமான விடயங்களின் மதிப்பீட்டில் ஏற்பட்ட சீர்திருத்தங்களினுலும், ஏற்பட்டன.

*அ.* அமைப்பிலும் முறையிலும் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:—

1. மொத்தத் தேசிய உற்பத்தியின் (அட்டவணை II அ-2) அடிப்படை அட்டவணையில், தற்போது, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகச் செலவுகளை ஏற்றுமதிக்கான உற்பத்தியிலிருந்து கழித்து, ''வர்த்தகம்'', ''போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும்'', ஆகியவற்றிற்கு இடையிற் பிரித்தளிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் இவ்விநியோகச் செலவுகள் ஏற்றுமதிக்கான உற்பத்தியின் (நிகர உற்பத்தி) ஒரு பகுதியாய் இருந்தன.

2. பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளின் நிகர உற்பத்தியைக் கணிக்கையில், உற்பத்தியாளர்களின் பெறுமானங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைக் கழித்த, சந்தை விலைப்பெறுமானங்களே தற்பொழுது பாவிக்கப்படுகின்றன. எனினும் முன்னர் சில விடயங்களின் இறக்குமதிப் பெறுமானங்கள் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படையிற் கழிக்கப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் சந்தைப் பெறுமானம் இவைகளின் மேல் விதிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வைகளையும் மதிப்பிடப்பட்ட விநியோகச் செலவுகளையும் அடக்குகின்றன. இவ்விநியோகச் செலவுகள் தற்பொழுது ஒன்று சேர்க்கப்பட்டு ''வர்த்தகம்'' ''போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும்'' என்பனவற்றிற்கும் பிரித்தளிக்கப்படுகின்றன. மறுபுறத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான இறக்குமதித்தீர்வைகள், மதிக்கப்பட்ட நிகர உற்பத்தியின் கூட்டுத்தொகையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இவ்விதம் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகள் கருத்து ரீதியின்படி உண்மையான முறைகளில் மூல உற்பத்திப் பொருட்களுக்கான மொத்த வெகுமதிகளாகும். பரம்பரை முறையைத் தழுவி, இங்கு தரப்பட்டுள்ள கூட்டுத்தொகைகள், மூலப்பொருட்களின் வெகுமதிகள் என்ற அடிப்படையிற் தயாரிக்கப்பட்டுள்ள பொழுதிலும், அவை சினைக்கொள் விலைகளிலே தரப்பட்டுள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.

3. ''அரசாங்கம்'' என்பதின் விளக்கம் அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட தொழில் முயற்சிகளை மட்டும் நீக்கும் பொருட்டுக் குறுக்கப்பட்டுள்ளது. எனவே புகைவண்டி, மின்சாரம், துறைமுக ஆணைக்காரியாலயம், தபால் தந்தி, உப்பு ஆகிய திணைக்களங்கள் தற்பொழுது அரசாங்கத்தில் இருந்து நீக்கப்பட்டுப் ''பொது முயற்சிகள்'' என வகுக்கப்பட்டுள்ளன. திணைக்கள முயற்சிகளிலிருந்து வேறுபட்ட அரசாங்கக் கூட்டுத் தாபனங்களைத் தனிப்பட்டோர் துறையுடன் சேர்த்துத் ''தனிப்பட்டோர் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும்''[2] என்ற, இணைக்கப்பட்ட தலையங்கத்தின் கீழ் பாவிக்கப்பட்டுள்ளது.

---

(1) இக்குறிப்பு, 1961ம் ஆண்டுக்கான இலங்கை மகாவங்கியின் ஆண்டு அறிக்கையிற் பிரசுரிக்கப்பட்ட தேசிய உற்பத்திக்கும் செலவிற்குமான நுணுக்கமான குறிப்பிற்குத் துணையானதாகும்.

(2) தனிப்பட்டோர் துறையையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் இணைத்துப் பாவித்தல் ஐக்கிய நாடுகளின் வழக்கத்தைத் தழுவியதெனினும், இலங்கை சம்பந்தப்பட்டவரையில் இவ்விரண்டையும் வெவ்வேருகப் பிரிப்பதே விரும்பத்தக்கதாகும். தனிப்பட்டோர் துறைக்கும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் இணைந்து (மறைமுக அடிப்படையில்) கிடைக்கப்பெற்ற மதிப்பீடுகளிலிருந்து, நிகர உற்பத்திக்கும் மூலதன ஆக்கத்திற்கும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உதவிய பங்குகளைப் பிரிக்கும் நோக்கத்துடன், அவ்வாண்டில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான விபரங்கள் சேர்ப்பதற்கு ஓர் முயற்சி எடுக்கப்பட்டது. ஆயினும், விபரங்களுக்கான வேண்டுதல்களுக்கு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினுல் அளிக்கப்பட்ட ஊக்கமற்ற பதில்களின் காரணமாக, அவைகள் உதவிய பங்குகளைப் பிரித்தெடுக்கச் செய்த முயற்சி புலனளிக்கவில்லை.

4. வங்கிகள், காப்புறுதித்தாபனங்கள் ஏனைய நிதித்தாபனங்கள் ஆகியவற்றின், நிகர உற்பத்திக்கான ஒரு நேர்முக மதிப்பீடு இவ்வருடம் முதன்முறையாகச் செய்யப் பட்டுள்ளது. அடிப்படை அட்டவணை II அ-2ல், இத்தாபனங்களின் நிகர உற்பத்தியில் ஒரு பகுதி ''சேவைகள்'' (முன்பு சேர்க்கப்படாதவைகளில்) சேர்க்கப்பட்டுத் தனிப்பட்டோர் களுக்கு அளிக்கப்பட்ட நிதிச்சேவைகளைப் பிரதிபலிக்கின்றன. முயற்சிகளுக்கான நிதிச் சேவைகள், பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளுக்கான நிகர உற்பத்தியின் ஒரு பகுதியானபடியாற் தனித்தனியே கூட்டப்படுவதில்லை. கைத்தொழில் மூலங்களின் படி மொத்த தேசிய உற்பத்திக்கான அட்டவணை II அ-2ல், வங்கிகள், காப்புறுதித் தாபனங்கள், ஏனைய நிதித் தாபனங்கள் ஆகியனவற்றின் நிகர உற்பத்தி, பிரத்தியேக தலைப்பின் கீழ்க் காட்டப்பட்டுள்ள பொழுதிலும், இவ்வட்டவணையின் ஏனைய தலைப்பு களிலிருந்து பொருத்தமான கழிவுகள் செய்தல் வேண்டும். நிதித்தாபனங்களின் நிகர உற்பத்தியைக் கணிப்பதில் வர்த்தக வங்கிகளிடமிருந்து மிகத் திறமான விபரங்களும், ஏனைய நிதித்தாபனங்களிடமிருந்து திருப்திகரமான தரவுகளும் மகாவங்கிக்குக் கிடைத் தனவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆயினும் காப்புறுதித் தாபனங்களிடமிருந்து கிடைத்த தரவுகள் குறைவானவைகளாகும். எனினும் பொதுப்படையான மதிப்பீடுகள் நியாயமான அளவு நம்பகமானவைகள் எனத் தெரிகின்றன.

5. சென்ற ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்திக்கான அட்டவணையிலுள்ள ''போக்கு வரத்து'' என்னும் தலைப்பும், சென்ற ஆண்டின் மொத்தத் தேசிய செலவுக்கான அட்ட வணையிலுள்ள ''உள்நாட்டுப் பிரயாணம்'' என்னும் தலைப்பும், ''போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும்'' என்னும் தலைப்பினுல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இப்புதிய தலைப்பாகிய ''போக்குவரத்தும் செய்தி அறிவிப்பினதும்'' உள்ளடக்கம் தபாற் தந்திச் சேவைகளையும், துறைமுக ஆணைக்காரியாலயச் சேவைகளையும், ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகச் செலவுகளில் வேறெங்கும் சேர்க்கப்படாதவைகளையும், அடக்கும்.

ஆ. விரிவான விடயங்களின் திட்டவட்டத்தன்மையிலும் அடக்கத்திலும் ஏற்பட்ட சீர்த்திருத் தங்கள் சம்பந்தமான பிரதான திருத்தங்கள் பின்வருமாறு:—

1. அட்டவணைகள் II அ-3லும், II அ-7லும் உள்ள தனிப்பட்டோர் துறையினதும் அர சாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் மூலதன ஆக்கத்தின் மதிப்பீட்டில் ஒரு பிரதான மாற்றம் ஏற்பட்டுள்ளது. அது, ''கட்டடமும் ஏனைய சில கட்டட ஆக்கத் தொழிலும்'', என்ற பிரதான விடயத்தின் மதிப்பிடுதலில் 1952ம் ஆண்டு முதல் மூலப்பொருள் (10/3 சமம்) பாவிப்பு அடிப்படையிலிருந்து, நடைமுறைக் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கட்டட ஆக்கப் பொருட் களின் பெறுமானத்தை மாற்றியமையே. எனவே, ''கட்டடமும் ஏனைய சில ஆக்கப் பொருட்களும்'' என்பதில் ஏற்பட்ட மூலதன ஆக்கத்தின் பெறுமானத்திற்கும், கொள் விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படையிலுள்ள கட்டட ஆக்கப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமானத்திற்கும் இடையில், ஓர் நெருங்கிய ஒருமைப்பாடு உண்டு எனக் கருதப்படுகின்றது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதாம் ஆண்டுகளில் இக் கருத்து செல்லுபடியாகவிருந்த பொழுதிலும் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட சீர் திருத்தங்களின் பயனுக இக்கருத்து, பெருமளவிற் செல்லுபடியற்றதாகியுள்ளது. கொள் விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலைகளில் இறக்குமதி செய்யப்பட்ட கட் டட ஆக்கப் பொருட்களின் பெறுமானம், 1952ம் ஆண்டளவிலிருந்ததிலும் பார்க்கத் தற்பொழுது குறைந்த அளவுதான் மூலதன ஆக்கத்தின் பெறுமானத்திற் பங்கு கொள்ளுகிறது, என நம்புவதற்கு இடமுண்டு. உள்நாட்டுச் சிமெந்து உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு, சூழ்நிலையை மாற்றியமைத்தவோர் காரணியாகும். ''கட்டடமும், ஏனைய சில ஆக்கப் பொருட்களினதும்'' மூலதன ஆக்கத்தின் மதிப்பீட்டைப் பெறும் பொருட்டு 10/3 காரணியைப் பாவிக்குமுன், தற்போதைய மதிப்பீடுகளில் இச்சீர்த்திருத் தத்திற்கு இடம் விட்டு ஆலையிலிருந்து வெளியான சிமெந்தின் பெறுமானத்துடன் கொள் விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலையில் இறக்குமதி செய்யப்பட்ட கட் டட ஆக்கப் பொருட்களின் பெறுமானத்தையும் கூட்டல் வேண்டும். இத்திருத்தங்களுட னும் மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகள் நம்பகமற்றவையாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றன. மூலதன ஆக்கத்தின் மதிப்பீட்டு முறைகளிற் புரட்சிகரமான மாற்றங்கள் மிகவும் அவசியமெனினும், இவை இலங்கையில் நடத்தப்படும் தனிப்பட்டோர் முதலீட்டத்தின் திட்டவட்டமான அளவையின் முடிவிற்தான் தங்கியுள்ளன.

2. இறக்குமதிகளினதும், இறக்குமதித் தீர்வைகளினதும் பகுப்பு விரிவாக்கப்பட்டதைத் தொடர்ந்து மொத்தத்தேசிய உற்பத்தியினதும், மொத்தத்தேசிய செலவினதும் அட்டவணைகளிலுள்ள பல தொடர்பற்ற விடயங்கள் தொடர்புள்ளவைகளாக்கப்பட்டுள்ளன. கையிருப்பில் வைக்கப்பட்ட சகல இறக்குமதிகளும் பாவிப்பிற்குரிய பொருட்களென, ஒன்றில், (அ) தனிப்பட்டோர் நுகர்ச்சி (ஆ) அரசாங்க நுகர்ச்சி (இ) உள்நாட்டு மூலதன ஆக்கம், அல்லது, பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிற் பாவனையாகும் நடுத்தரப் பொருட்கள், ஆகியனவற்றுட் பிரித்தளிக்கப்பட்டுள்ளன. மொத்த இறக்குமதித் தீர்வைகளும் இவ்விதம் பிரித்தளிக்கப்பட்டுள்ளன. இறக்குமதிகளினதும், இறக்குமதித் தீர்வைகளினதும், இவ்விரிவாக்கப்பட்ட பகுப்பின் பயன் என்னவென்றால் அரசாங்கத்தினால் (அட்டவணை II அ-3 லுள்ள தனிப்பட்டோர் நுகர்ச்சியின் மதிப்பீட்டில் இவ்விடயம் சய அடையாளமுள்ளதாக விளங்குகின்றது) கொள்வனவு செய்யப்பட்ட உள்நாட்டுப் பொருட்களினதும் சேவைகளினதும் மதிப்பீட்டில் ஏற்பட்ட சீர்திருத்தமேயாகும். அரசாங்கத்தினாற் கொள்வனவு செய்யப்பட்ட உள்நாட்டுப் பொருட்களினதும் சேவைகளினதும் தற்போதைய மதிப்பீடு, ஒரு பக்கத்தில், மொத்த அரசாங்கச் செலவுடன், மொத்த அரசாங்க நிகர உற்பத்தியை ஒப்பிடும் பொழுது ஏற்படும் மிச்சம் எனவும், மறுபக்கத்தில் இம்மிகுதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின்தும், சேவைகளினதும் அரசாங்கக் கொள்வனவுகளைக் கழிப்பதுமாகும். அரசாங்க உள்நாட்டுக் கொள்வனவுகளைக் கணிப்பதில் இம்முறை புகுத்தப்பட்டதின் பயனாகத் தற்பொழுது அரசாங்க நுகர்ச்சிக்கும், தனிப்பட்டோர் நுகர்ச்சிக்கும் இடையில் இதுவரையிலிருந்து வந்த இரட்டைக் கணிப்பு ஓரளவு நீக்கப்பட்டுள்ளது, என நம்பப்படுகிறது.

3. அரசாங்க நிகர உற்பத்திக்கும், தனிப்பட்டோர் துறையினதும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் நிகர உற்பத்திக்கும், இடையிலிருந்த சில இரட்டைக் கணிப்பு விபரங்களை நீக்கியதன் மூலம், மூலதன ஆக்க மதிப்பீடுகளின் திட்டவட்டத்தன்மை சீர்திருந்தியுள்ளது. மேலும் அரசாங்க நுகர்ச்சியின் மதிப்பீடுகள், முன்பு தவறுதலாகப் பொருட்களினதும் சேவைகளினதும் செலவிற் சேர்க்கப்பட்டிருந்த சில மாற்ற விடயங்களை, நீக்கியும், ஒப்பியல்பாக்கியும், திட்டவட்டமாக்கப்பட்டுள்ளன.

## உண்மை உற்பத்தி, வருமானம், செலவு ஆகியனவற்றின் மதிப்பீடுகள்

தனித்தனி உற்பத்தியினதும் செலவினதும் முறைகளிற் தொகுதி விடயங்களின் விரிவாக்கச் சுருக்கத்தைத் தருவதற்கு, இவ்வருடம் முயற்சி எடுக்கப்படவில்லை. இச்சுருக்கத்திற்குப் பாவிக்கப்படும் விலைக்குறிகாட்டிகள், கடந்த சில ஆண்டுகளிற் பெருமளவில் உண்மையைப் பிரதிபலிக்காதமையே இதற்குக் காரணமாகும். உள்நாட்டு உபயோகத்திற்கென உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் சம்பந்தமாக, கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியிலுள்ள சில விரிவான விடயங்கள் இதுவரை சுருக்கணிகளாகப் பாவிக்கப்பட்ட பொழுதிலும், விலைகளின் நடமாட்டங்களைப் பற்றி இது ஓர் தப்பான விளக்கத்தைக் காட்டுகின்றது. உதாரணமாக இக்குறிகாட்டியின் போக்குவரத்து விடயம் (இது பலவித மான்யங்கள் பெறுகின்ற பிரயாணிகளின் பொதுப் போக்குவரத்துப் பெறுமானங்களைப் பெருமளவிற் பிரதிபலிக்கின்றது) பொருட்களின் ஏற்றியிறக்கற் பெறுமானங்களின் சுருக்கணியாக உபயோகிக்க உகந்ததல்ல. செலவு முறையில் இதுவரை உபயோகத்திலிருந்த சில இறக்குமதி விலைக்குறிகாட்டிகளும்—தனிப்பட்டோர் நுகர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விரிவாகச் சுருக்குவதற்காகவும், தனிப்பட்டோர் மூலதன ஆக்கத்தின், மறைமுகமாகக் கொள்விலை காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படை விலையிலுள்ள, இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டப் பொருட்களின் தொகுதிகளையும் சுருக்குவதற்காகவும்—கடந்த சில ஆண்டுகளில் இறக்குமதிகளின் அமைப்பில் ஏற்பட்டிருக்கின்ற புரட்சிகரமான மாற்றங்களின் பயனாகச் சில ஈடுபாடுகளை இழந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

உண்மை நியதியின்படியான சுருக்கணிகளை உண்டாக்குவது சம்பந்தமான முழுவிடயமும் கவனிப்பின் கீழ் ஓர் கடைசி முடிவிற்குக் காத்திருக்கின்றது. உண்மை உற்பத்தி, வருமானம், செலவு ஆகியனவற்றின் மதிப்பீடுகளைப் பெறுவதற்கு மிகவும் பொருத்தமானவோர் முறை இவ்வருடாந்த அறிக்கையில் உபயோகிக்கப்பட்டுள்ளது. உண்மைத் தேசிய உற்பத்தி சம்பந்தமாக இங்கு தரப்பட்டுள்ள மதிப்பீடுகளில், ஏற்றுமதிக்கான உற்பத்தியும், உள்நாட்டு உபயோகத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட நெல், தேயிலை, தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியனவற்றின் தரவுகளின் அடிப்படையில் உண்மையாக உற்பத்தி செய்யப்பட்ட தொகைகளும், 1959ம் ஆண்டு விலைகளில் நுணுக்கமாகத் திருப்பி விலைமதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் நிகர உற்பத்தி, மத்திய அரசாங்க ஊழியர்களுக்கான கீழ் மட்டக்கூலி வீதக் குறிகாட்டியினாற் சுருக்கப்

பட்டுள்ளது. (இருந்த பொழுதிலும் 1959ம் ஆண்டிற்கும் 1962ம் ஆண்டிற்குமிடையிலுள்ள காலத்தில் இக்குறிகாட்டியில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை). எஞ்சிய நிகர உற்பத்தி, கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் உள்நாட்டுத் தொகுதி உபகுறிகாட்டியாற் சுருக்கப் பட்ட பொழுதிலும், இது நிலையான விலைப் பெறுமானங்களிற் சேர்க்கப்பட்டுள்ள பல வெவ்வேறு விடயங்களின் கூட்டுத்தொகைக்கு அழுத்தமற்றதும் திருத்தமற்றதுமானவோர் ஈடுசெய்கையே ஆகும். இம்முறையிற் தவறுகள்—அதாவது, முதலாவதாக, உபயோகிக்கப்பட்ட உபகுறிகாட்டி உற்பத்தியாளர்களின் விலைகளிலும் பார்க்கச் சில்லறை விலைகளில் ஏற்பட்ட நடமாட்டங்களையே பிரதிபலிக்கின்றன; இரண்டாவதாக, உபகுறிகாட்டியிலுள்ள விடயங்களின் அளவு மட்டங்கள் தேசிய உற்பத்தியின் அட்டவணையிலுள்ள விடயங்களிலிருந்து வேறுபடுகின்றன—இருந்த பொழுதிலும், இது ஏனைய விலைக்குறிகாட்டிகளின் விரிவான பாவிப்பின் மூலம் கிடைக்கக்கூடிய திலும் பார்க்க, விலை நடமாட்டங்களின் உண்மைப் போக்கைப் பெருமளவிற் காட்டுகின்றது.

அட்டவணை II அ-13 லுள்ள உண்மைத் தேசிய வருமானத்தின் மதிப்பீடுகளும் உண்மைத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகளும் (மேலே விவரிக்கப்பட்டபடி கிடைக்கப் பெற்றவை) உண்மை வருமானத்தின் பயனுகச் சர்வதேச வர்த்தகமாற்று விகிதத்தில் ஏற்படும் மாற்றங்களுக்குத் திருத்தியமைத்தபின் கிடைக்கப்பெற்றவை. உண்மைச் செலவின் மதிப்பீடுகள், உண்மை வரு மானத்துடன் மானியங்கள் தவிர்த்த மறைமுக வரிகளைக் கூட்டுவதன் பயனுகக் கிடைக்கின்றன. (பிந்தியவைகள், அடிப்படை 1959ம் ஆண்டிலிருந்தது போல், இவ்வுண்மைச் செலவு வீதம் 1960ல் இருந்து 1962வரையுள்ள வருடங்களிலும் இருப்பதற்கொப்பத், திருத்தியமைக்கப்பட்டுள்ளன).

இவ்வறிக்கையிற் தரப்பட்டுள்ள உண்மை உற்பத்தி, வருமானம், செலவு ஆகியனவற்றின் மதிப்பீடுகள் நெருங்கியதும், பொருத்தமானதுமெனக் குறிப்பிடுவதுடன், அவை உண்மை நியதியின்படியான உண்மை அதிகரிப்புகளை மேலதிகமாகக் காட்டுகின்றன போலும். உள்நாட்டு உற்பத்தி, கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியின் உள்நாட்டுத் தொகுதி உபகுறிகாட்டி யாற் சுருக்கப்பட்டிருப்பதே, இம்மேலதிகத்திற்குப் பெருமளவிற் காரணமாகும். எனினும், உற்பத்தியாளர்களின் விலைகளில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிலும் சேவை களிலும் ஏற்பட்ட உண்மை அதிகரிப்புக் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.